தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும்;
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்;
தொடர்ந்து செல்வேன்!
ஏற்றதொரு கருத்தை
என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்
வரினும்
நில்லேன்; அஞ்சேன்!"

ஆண்டு சந்தா 6—0—0
6 மாதச் சந்தா 3—0—0

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளி நாடு: மூன்றணா. | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-14.

மலர் 1 | சென்னை 18—12—1954 சனிக்கிழமை | இதழ் 25

யாருக்குத் தடை விதிப்பது?

தோழர் எம். ஆர். இராதா நடித்துவரும் இராமாயண நாடகம், இங்குள்ள மக்களுள் ஒருசிறு சுயநல கும்பலின் உள்ளத்தில், அச்சத்தையும், திகைப்பையும் மூட்டியிருக்கிறது என, ஆட்சியாளர்கள் நம்பும் அளவிற்கு, அக்கும்பலின் விஷமச் செயல்கள் இருந்துவருகின்றன. அச்சிறு தொகையினருக்கு மட்டுமல்லாமல்- இந்துமதத்தைச் சார்ந்தவர்களெனச் சொல்லிக்கொள்ளப்படும் மக்கள் அனைவருடைய மத உணர்வும், அந்த நாடகத்தால் புண்பட்டுக் கிடப்பதாகவும். அச்சிறு கூட்டம் ஓயாமல் ஒப்பாரி வைத்தும் வருகிறது. இது வெறும் போலி—நம்பத்தகாத கற்பனை என்பதை மேற்படி நாடகத்திற்குக் கிடைத்துவரும் பொது மக்கள் ஆதரவு, விளக்கம் தந்த வண்ணம் உள்ளது.

மேற்படி நாடகத்தினால் 'இந்து'க்களின் மனம் புண்படுகிறது ஏன்? இக்கேள்விகளுக்குக் கிடைக்கப்பெறும் விடையில்தான், அச்சிறு கூட்டத்தினர் கிளர்ச்சியின் முழு இரகசியமும் அடங்கி உள்ளது. நிற்க,

இச்சிறு கூட்டத்தின் கிளர்ச்சிக்கு எது காரணமாக இருந்த போதிலும் இருக்கட்டும். இக்கும்பலின் எதிர்ப்புக்குக் காரணமாய் இருக்கிற இராமாயண நாடகத்தில் 'இந்துக்களி'ன் மனதைப் புண்படுத்தும் தன்மை, இக்கும்பல் குறைபடுவது போன்றே இருப்பதாகவும் விவாதத்திற்காக ஒப்புக்கொள்வோம். உண்மை நிலை இதுவானால், மேற்படி நாடகத்தின் மூலம் நாடகப் பொறுப்பாளர், இன்ன சட்டப்பிரிவின்கீழ் குற்றமிழைத்திருக்கிறார் என, அவர் மீது வழக்குத் தொடுத்திருக்க வேண்டியதன்றோ ஆட்சியாளர்களின் நீங்காக் கடமையாகும். அதை இந்த ஆட்சியாளர்கள் இது கத்தை ஒரு புகலாக வைத்துக்கொண்டு, வறுமையால் தாக்குண்டு கிடக்கும் சில பலர் அமைதியைக் குலைக்க முனையுமாறு விட வேண்டும்,

விவாதத்திற்குரிய இராமாயண நாடகத்தில், மதஉணர்வைப் புண்படுத்தும் பகுதியின்மீது வழக்குத் தொடர கிரிமினல் சட்டத்தில் விதி இல்லையோ என எவரும் எண்ணத் தேவையில்லை. இ. பி. கோ. 295-(அ) பிரிவு இதைத்தான் வலியுறுத்துகிறது. 'இந்தியக் குடிமக்களுள் ஏதாவது ஒரு வகுப்பின் மத உணர்வைப் புண்படுத்தும் நோக்குடன், சொல்லாலும், எழுத்தாலும், கண்களுக்குப் புலனாகும் காட்சிகளாலும், மதத்தை அவதூறு செய்தாலோ, அவ்வாறு செய்ய முயற்சித்தாலோ, இரண்டாண்டு காலம் சிறை தண்டனை விதிக்கவும், அபராதம் சேர்த்து விதிக்கவும் அதிகாரமுண்டு' என இருக்கவேண்டும்' ஆனால் ஆட்சியாளர்கள் இந்நேர்மையான முறையை மேற்கொள்ளாது, வேண்டுமென்றே இருந்துவிட்டிருக்கின்றனர். சட்டத்தில் வாய்ப்பு இருந்தும் வசதி இருந்தும்கூட, அதை மேற்கொண்டு, இராமாயண நாடக உரிமையாளருக்கும் மற்றவர்களுக்கும் ஒரு தெளிவான பாதையைக் காட்டவேண்டிய ஆட்சியாளர்கள். ஏன் அவ்வாறு செய்யாது, செயலற்று இருந்துவிட்டார்கள் என்பது ஆராய்ச்சிக் குரியதாகும்.

சட்டத்தில் மேற்குறித்த விதி இருப்பது தெரியாததினால், இராமாயண உரிமையாளர்மீது வழக்குத் தொடராமல் இருந்துவிட்டார்கள் எனச் சொல்ல முடியாது வேண்டுமென்றே ஏதோ ஒரு காரணத்திற்சாகத்தான் ஆட்சியாளர்கள், அவ்வாறு நடவடிக்கை எடுக்காது இருந்திருக்கிறார்கள் என்

"கூலிகளின்" ஒப்பாரிக்குப் பயந்து உரிமையைப் பறிப்பதா?

என இவ்விஷமிகள் கூறுங் கூற்றில் உண்மை இருப்பதாகவே வைத்துக் கொண்டாலும், தாங்களும் இந்துக்கள்தான் எனச் சொல்லிக்கொள்ளும் மற்ற மக்களுக்கெல்லாம் ஏற்படாத வெறுப்பும் கோபமும், இச்சிறு கூட்டத்திற்கு மட்டும் ஏற்படக் காரணம் என்ன? மற்றவர்கள், மேற்படி நாடகத்தைக் குறித்து வாய் திறக்காமல் இருக்கும் வேளையில், இச்சிறு கூட்டம் மட்டும், நாடகத்திற்கு எதிராக மாரடித்துக் கொண்டு அழக்கிளம்புவானேன்.

அந்த நாடகம் மதஉணர்வைப் புண்படுத்துகிறது. நாடகத்திற்குத் தடை விதிக்கவேண்டும். அந்நாடகத்தை நடிக்கும் நடிகர்களைக் கடுமையாக தண்டிக்கவேண்டும் என்றெல்லாம், ஆட்சியாளர்களுக்கு. இச்சிறு கூட்டம் எச்சரிக்கைகளுக்கு மேல் எச்சரிக்கை விடுத்தவண்ணம் உள்ளதே, அது வரை செய்ததுண்டா? ஏன் அத்தகு நடவடிக்கைஎடுத்துக்கொள்ள ஆட்சியாளர்கள் முன்வரவில்லை.

மேற்படி நாடகத்தை ஒரேயடியாக நடிக்கவிடாமல் தடுத்துவிட ஆட்சியாளர்கள் கட்டளை பிறப்பித்தார்கள் என்பதும், அக்கட்டளை உயர்நீதிமன்றத்தால் செல்லத்தகாதது என ஆட்சியாளர்களுக்கு எதிராகத் தீர்மானிக்கப்பட்டு விட்டது என்பதும் நமக்குத் தெரியும்.

நாடகத்தையே நடிக்கவிடாமல் தடுப்பதற்கு, நடைமுறையில்உள்ள சட்டத்தில் இடமில்லை என்று ஏற்பட்டதும், மேற்படி நாடகத்தில் கிரிமினல் சட்ட விதிகளுக்கு உட்பட்ட ஆட்சேபகரமான அம்சங்கள் இருக்குமானால், அவைகள்மீது சட்டப்படி வழக்குத் தொடர்வதை அல்லவோ ஆட்சியாளர்கள் உடனடியாக மேற்கொண்டு இருக்க வேண்டும்? ஏன் அதைச் செய்வதற்குப் பதிலாக, மேற்படி நாட மேற்படி சட்டத்தின் விதிவிளக்கம் தருகிறது. இதே விதியின் சாரத்தைத்தான் புதிய நாடகக் கட்டுப்பாடு மசோதாவின் ஆட்சியாளர்கள் சேர்த்து இருக்கின்றனர். நிற்க,

இந்த விதியின்படி, இராமாயண நாடகப் பொறுப்பாளர்மீது ஆட்சியாளர்கள் வழக்குத் தொடுத்திருந்தால், அவ்விதியில் கூறப்படும் குற்றம் அந்த நாடகத்தில் இருக்கிறதா இல்லையா என்பதை நீதிமன்றம் தீர்மானித்துவிட்டிருக்கும். அதன் விளைவாக, நீதிமன்றம் குறிப்பிடும் குற்றப் பகுதியை விலக்கிவிட்டு, இராமாயண நாடகத்தைத் திருத்தம் செய்து நடிக்க நாடகப் பொருப்பாளருக்கு ஒரு வாய்ப்பும் கிடைத்திருக்கும். இப்பொழுது நாடகற்திற்கு எதிராகக் கொக்கரிக்கும் சிறு கும்பலின் கொட்டமும் அடங்கிவிட்டிருக்கும்.

இதுதான்நியாயம். இதைத்தான் ஆட்சியாளர்களும் பின்பற்றி பது, அவர்கள் செயலால் தெரிய வருகிறது. என்ன அது?

இராமாயண நாடகத்தை ஒரேயடியாகத் தடுத்துவிட சட்டபுத்தகத்தில் அதற்கான வழியைக் கொண்டு வழக்குத் தொடுக்கவோ ஆட்சியாளர்களுக்கு விருப்பமில்லை. இத்தகைய சூழ்நிலையில் இராமாயண நாடகத்தில் இருப்பதாக ஒரு சில சுயநலக் கும்பலால் சுட்டிக் காட்டப்படும் குறைபாடுகள் சட்டப்படி ஒப்புக்கொள்ளத் தக்கதல்ல. அக்கும்பலின் குற்றச்சாட்டு, அதன் சொந்தக் கருத்தே அல்லாது வேறு ஒன்றுமில்லை. அதைப் பொருட்படுத்தி, இராமாயண நாடகம் நடிப்பதைக் கைவிடவேண்டிய கட்டாயம் அதன் உரிமையாளருக்கும் ஏற்படவில்லை. எனவே, அவர் விரும்பியவாறு மேற்குறித்த நாடகத்தை நடிக்க அர

(2-ம் பக்கம் பார்க்க)

மதச் சார்பற்ற ஆட்சியாளரா? இந்துமதப் பாதுகாவலரா?

'நாடகக் கட்டுப்பாடு சட்டம்' பற்றி பலரும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். பலரும் அதை எதிர்த்தே கூறியுள்ளனர். சில பத்தாம் பசலிகளும்; தவறிப்போய் இருபதாம் நூற்றுண்டில் பிறந்தவர்களும்; அதை ஆதரித்திருக்கிருர்கள். சுருக்கிப் பார்த்தால், சென்னை அரசாங்கம் இந்த சட்டத்தை ஒரு தலைக் கண்ணேட்டத்தோடு கொண்டு வந்திருப்பது புரியும். இந்துக்கள் என்று கூறிக்கொண்டு, ஏமாந்தவன் தலையில் மிளகாய் அரைக்கிற கூட்டத்திற்கு, சென்னை அரசாங்கம் பக்க மேளம் வாசிப்பது தான் இந்தச் சட்டம் என்பதும் புரியும். பணம் கொடுத்தவன் எடுத்துக் கொடுக்கிற சட்டையை மாட்டிக் கொண்டு, சொல்லிக் கொடுக்கிற வார்த்தையைக் கூவிக் கொண்டு, வயிற்றுச் சோற்றுக்கு வழி தேடுகிற சிலரை, 'பக்தர்கள்' என்று கருதிக் கொண்டு 'பரம பக்த'ரான சுப்பிரமணியம் தானும் சேர்ந்து அவர்களோடு குதிக்கிருர். ஒரு சட்டிச்சாமியார், "ராமனைப் பழித்தால் கொன்றுபோடுவேன்" என்று சட்டசபையைக் குட்டிச் சுவராகக் கருதிக் கொண்டு கதறியிருக்கிருர். இதையெல்லாம் பார்க்கும்போது நமக்கு ஏற்படுகிற திருப்தி, இந்து மதம் விரைவில் அழிய இவர்கள் வழி வகுக்கிருர்கள் என்பதுதான்.

ராமனை, மேடையில் ஆடவிடுகிற ராதா, தான் வால்மீகி ராமாயணத்தையே நடத்துவதாகக் கூறுகிருர். இப்போது வந்துள்ள சட்டத்தின் படி, தடை செய்வதானல், வால்மீகி ராமாயணம் யார் நடத்தினுலும் தடை செய்யலாம். வாழ்க! நிற்க,

புராணத்தை மாற்றி நடித்தால்தான் இந்தச் சட்டம் தன் கரங்களை நீட்டுமென்ருல், மாற்ருமலேயே நடித்துக் காட்டலாம். நாம் கூடத்தான்'

காட்டுக்குப் போன ராமனைத் தேடிப்போகிற பரதன் கோஷ்டியினர் படகில் போவதாக ஒரு காட்சி. அதில் ஒரு பெண், படகின் ஓரத்தில் உட்கார்ந்திருக்கிருள். தண்ணீர் தெளித்து விழுந்து அவளது சகல அங்கங்களும் தெரிகின்றன. எல்லோரும் ரசித்தபடி படகில் போகிருர்கள்-நாடகம் பார்க்கிறவர்களும் வைத்த கண் வாங்காமல் பார்க்கக் கூடிய இந்தக் காட்சி, ராமாயணத்தில் உள்ளது; இதை அப்படியே காட்டலாம்.

(வரைக் காட்சிப்படலத்தில் வருவது போல) ஆடவர்கள் சிலர், தூங்குகிற பெண்களின் ஆடைகளைக் களைந்து விட்டு 'பாலிஷ்' போடுகிருர்கள்-இதை அப்படியே காட்டலாம்.

'க்யூ' வரிசையில் ஐந்து பேர்களுக்கு பதில் சொல்லி 'லிமிடெட் கம்பெனி' அமைத்த பாஞ்சாலி, கர்ணனிடம் போய் ஆருவது காதலுக்கு அச்சாரம் போடுவதைக் காட்டலாம். அதோடு லால்குடி சரவணர் அவர்கள் சொன்னது போல, ஆடவரைக் கண்டக்கால்...புளகிதத்தையும் காட்டலாம்! இவையும் புராணத்தில் உள்ளவையே!

ஆண்டவன், பக்தையிடம் வந்து, "எனக்கு நிர்வாணமாக சோறுபோடு" என்று கேட்க, அந்தப் பத்தினியும் பிறந்த மேனிக்கு நின்று சோறு போடுவதைக் காட்டலாம்! (இந்தக் காட்சியில் வாலிபர்கள் மேடைமீது வராமல் கண்காணிக்க போலீசார் வேண்டும்.)

பரமனும் உமையும் ஆண் பெண்யானைகளாக மாறி ஆனந்தக் கூத்தாடியதை அப்படியே காட்டினுல் பக்தி பெருகும்!

தாயைப் புணரும் பார்ப்பனன், அதைத்தட்டிக் கேட்ட தந்தையைக் கொன்று, பரமன் மூலம் முக்தி அடைந்த கதையில், 'முக்கியமான' கட்டங்களை தத்ரூபமாகக் காட்டினுல், மக்கள் பக்தி வெள்ளத்தில் மிதப்பார்கள்!

கோபால கிருஷ்ணன், பெண்களின் சேலைகளை அவிழ்த்துக் கொண்டு மரத்தின் மீது உட்கார்ந்திருக்கிருன். பெண்கள் கேட்கக் கேட்கக் கொடுக்க மாட்டேன் என்கிருன். இந்தக் காட்சியை சிறப்பான சோடனைகளோடு காட்டலாம்.

இந்திரன், அகலிகையைக் கள்ளத்தனமாகச் சேரும் போது, அகலிகை தன்னையறியாமல் லயிப்பதை நேருக்குநேர் காட்டலாம்.

நிச்சயமாக இவற்ருல், பக்தர்கள் மனம் புண்படாது; பண்படும்! சுப்பிரமணியம் பலமுறை பார்ப்பார்! சட்டசபைக்குப் போகாமல் பகலில் கூட நாடகம் பார்ப்பார்!

வரட்டுமே சட்டம்! உண்மையானதும், தமிழ்ப்புலவர்களே எழுதியதுமான புராணங்களை நாடகங்களாக நடத்தினுல் இந்தச் சட்டம் என்ன செய்து விடும்!

★

இப்போது சிலர் சொல்லலாம், "எண்ணம் கொஞ்சம் ஆபாசத்தைத் தொட்டுவிட்டது" என்று. புராணத்தைத் தொடும்போது ஆபாசந்தானே நிற்கிறது! என்ன செய்வது?

சட்டம் கொண்டு வந்த 'பெரியவர்'கள், அசல் புராண ஆபாசங்களுக்கும் சட்டம் கொண்டு வந்திருந்தால் வம்பே இருக்காது! இன்ருே நாளையோ அசல் புராணத்தையே நாம் நடத்தினுல் நன்ருயிருக்கும். அமைச்சர்கள் என்ன சட்டம் கொண்டு வருகிருர்கள் என்றும் பார்க்கலாம்!

யாருக்குத் தடை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கு உரிமை இருக்கிறது. அந்த உரிமையைத் தடுக்க, மற்றவர்களுக்கு எந்தவித உரிமையும் இடையாது. அதைத் தடுக்கவேண்டுமென, மற்றவர்கள் மறியல் செய்வோம் என அச்சுறுத்துவதும், மறியல் போர்வையில் பலாத்காரத்தில் இறங்குவதும், சட்ட விரோதமான பலாத்காரச் செயலை மேற்கொள்கிறவர்களைத் தடுத்து நிறுத்தி, இராமாயண நாடக உரிமையாளரின் செயலாற்றும்உரிமையைப் பாதுகாக்க ஆட்சியாளர்கள் முன்வந்திருக்க வேண்டும். அதற்காக சட்டவிரோதமான செயலில் ஈடுபடத் தயாரக இருக்கும் கூட்டத்தை, சட்டமூலம் தடைவிதித்து தடுத்திருக்க வேண்டும், இதுதான் முறை.

ஆனல்' ஆட்சியாளர்களோ, சட்ட ஒழுங்குக்குக் கட்டுப்பட்டு நடக்கும் ஒரு நாடகத்தை நடத்தக்கூடாது எனத் தடைவிதிப்பதின் மூலம், ஒரு தனி நபரின் அடிப்படை உரிமைக்கு உலை வைத்து இருக்கிருர்கள். அதுவுமன்றி, குறிப்பிட்ட சிலருக்குப் பிடிக்காத ஒரு நாடகத்தை, ஆட்சியாளர்களைக்கொண்டு தடுத்துவிட வேண்டுமென இனி யாராவது சிலர் கருதினுலும்,அவர்கள் மறியல் செய்யப்போவதாக அச்சுறுத்தினலே போதும், அந்த நாடகத்தை ஆட்சியாளர்கள்தடுக்க முன்வந்துவிடுவர் என்ற ஒரு முன்மாதிரி செய்கைக்கும், ஆட்சியாளர்களின் போக்கு இடம் கொடுத்து விட்டிருக்கிறது. ஆட்சியாளர்களின் பிரஸ்தாபச் செய்கையில் உள்ள முன்மாதிரியைக் கொண்டு, சிறு கும்பலின் கருத்துக்குகந்த நாடகங்கள் ஒவ்வொன்றுக்கும் தடைவிதிக்க ஆட்சியாளர்களைப் பணிய வைக்க; மற்றவர்களாலும் முடியும் என்ற எண்ணத்தை பொது மக்களிடம் உண்டாக்குவ தாகவும் இருக்கிறது. இத்தகைய ஒரு எண்ணத்தைப் பொதுமக்கள்கொள்ளுமாறு ஆட்சியாளர்கள் நடந்து கொண்டு இருப்பது, அவர்களுக்கும் நல்லது அல்ல—நாட்டுமக்களுக்கும் உகந்ததல்ல. எனவே செய்த தவறை உடனடியாகத் திருத்திக்கொள்ள முன்வருமாறு ஆட்சியாளர்களைக் கேட்டுக்கொள்ளுகிரேம்.

இராமாயண நாடக உரிமையாளர்மீது சட்டப்படி வழக்குத்தொடராது ஆட்சியாளர்கள் இருந்துவிட்டதற்கே, யாராவது பிரஸ்தாப நாடகத்துக்கு எதிராக பலாத்காரத்தில் ஈடுபட முன்வரட்டும், அதைக் கொண்டு அமைதிக்குப் பங்கம் எற்படக்கூடும் எனக் காரணங் காட்டி ஒரேயடியாகநாடகத்தையே நடிக்கவிடாமல் தடுத்துவிடலாம் என்பதே, அவர்களின் உள் எண்ணமோ என்றுகூடநினைக்க இடமுண்டு. இராமாயண நாடகத்திற்குப் போடப்பட்டுள்ள தடை உத்தரவு சம்பவம், மேற்குறித்துள்ள ஆட்சியாளர்களின் உள் எண்ணத்தைத் தான் ஒப்புவதாக இருக்கிறது.

ஆட்சியாளர்களின் இந்தத் தவறிய போக்கிறகு மற்ருென்றையும் காரணமாகக் கூறலாம். அதாவது புதியநாடகக் கட்டுப்பாடு மசோதாவைப் போன்ற ஒரு மசோதா தேவை என பலர் நினைக்குமாறு செய்யவும், திருத்தம் எதுவும் செய்யாமல் அதை அப்படியே சட்டமாக்கிவிட சட்டசபை உறுப்பினர்களை உடன்படச் செய்யவும், ஒரு சூழ்நிலையை நாட்டில் ஏற்படுத்த வேண்டும் என்பதே ஆட்சியாளர் குற்றமுள்ள நடத்தைக் மற்ருெரு காரணமாகும்.

அரசியல் தலைவர்களின் உறவு முறையை விளக்கமாகத் தெரிந்து கொண்டு இருப்பவர்களுக்கு மேற்கூறிய காரணத்தில் மறைந்திருக்கும் உண்மை தெளிவாகத் தெரியுமென்பதில் ஆட்சேபனை இருக்க முடியாது.

(—நம்நாடு)

வெளிவந்துவிட்டது!

திராவிடர்

நாட்குறிப்பு 1955

இந்த டயரியில்,
உலக அறிஞர்களின் 368 பொன்மொழிகள்
தி.மு.க. முழு விவரங்கள், சட்டதிட்டங்கள்
பேச்சாளர் முகவரிகள்
திராவிடர் திருநாட்கள்
அஞ்சல், பதிவுக் கட்டணங்கள்
விற்பனை வரி வருமான வரி விவரங்கள்
மற்றும் பல அறிய செய்திகள் அடங்கியுள்ளன.
அழகான உயர்ந்த கலிகோ பைண்டு
500 பக்கம் விலை ரூ. 1
விற்பனையாளர் கழிவு 20.
செலவு தனி, முன்பணத்துடன் தேவைக்கு எழுதுங்கள்.
பலவித பொங்கல் வாழ்த்துகள் கிடைக்கும்.

போர்வாள் அலுவலகம்
பவழக்காரத்தெரு,
சென்னை.

இலக்கியத்தில்

கண்ணீர்!

பாண்டிய நாட்டுப் பாவலனை காரி, மல்லியைத் தலைநகராகக் கொண்டு செம்மையாக ஆண்டு வருகிறான். அவனிடத்தில் ஆவூர் மூலங்கிழார் என்னும் பெரும்புலவர், காரியாதியின்மீது பேரன்பு மிக்கவர். காரியோ, பேராற்றல் படைத்தவன். தண்டமிழைக் காக்கும் புரவலன். புண்பட்ட நெஞ்சத்தினரைப் புறமுதுகைக் காட்டியோடுபவரைப் பின்தொடர்ந்து செல்லும் தீயகுணமில்லாதவன். வறுமை அவன் நாட்டைத் தீண்டியதில்லை. எங்கு பார்த்தாலும் ஒரே களிப்பு; இன்முக காட்சி. 'மன்னன் எவ்வழியோ, அவ்வழியே மக்கள்'. இம்முதுரைக்கு இழுக்குத் தேடாத தீந்தமிழ்க் காவலன். எங்கும் இயற்கை மணம் கமழும் குன்றுகள்; நறுமணம் கமழும் சந்தன மரங்கள்; முல்லைப் பூ இதழ் விரித்து, வருவோர்கெல்லாம் தன் மணத்தை வாரி இறைக்கும் வள்ளல் தன்மை கொண்டவை. அங்குள்ள பூக்கள் அங்கு தலைவிரித்தாடும் வைகையாறும், வருவோர்க் கெல்லாம் தன்னிடமுள்ள தெளிந்த நீரைப் 'பருகுங்கள்! பருகுங்கள்!' என்று கூறும் வள்ளல்தன்மை கொண்டது. காண்போர்க்கும், அதைக் கண்டு களிப்பெய்துவோர்க்கும் அது சிறந்த இடம்.

அத்தகைய தனிச் சிறப்புற்ற நாட்டிற்குக் காவலனாக விளங்குகிறான் காரி. கள்ளங் கபடமற்ற உள்ளம் படைத்தவர்கள், அங்கு வாழ்கின்ற மக்கள். அவன் ஆட்சியின்கீழ் கொடுமை நடைபெறவில்லை. எங்கு பார்த்தாலும் நன்மையே நடந்தேறியது. வருவோரையெல்லாம் வரவேற்று, வேண்டிய பொருளுதவி செய்து புகழ் தேடிக் கொண்டவன் அவன்.

இவ்வித தனிச் சிறப்போடு திகழ்கின்ற காரியின் நெடுமனைக்கு, ஆவூர்மூலங்கிழார் என்னும்பெரும் புலவர் வருகிறார். காரியோ, அப் புலவரை வரவேற்று வேண்டிய பொருள் கொடுத்து, சில நாட்களுக்குப் பிறகு ஆவூர் மூலங்கிழாரை, காரி வழியனுப்புகிறான்.

மாதங்கள் பல கழிகின்றன. காரிக்கோமானின் பகைவர்கள் தமிழர் முறைப்படி அவன் நாட்டுப் பசுக்களைக் கவர்ந்து செல்கின்றனர். இதையறிந்த காரி கொலுமண்டபத்தில், ''மறக்குடியில் பிறந்த மாசற்ற மாவீரர்களே, அயலவன் நம்நாட்டு ஆனிரைகளைக் கவர்ந்து சென்றிருக்கிறான். அந்தப் பொல்லாதவனின் குருதி, புழுதியிலே படிந்தோட வேண்டும்; காரியின் நாட்டிலே கன்றுகளைக் கவர்ந்து சென்றவர்களைக் கட்டி யிழுத்துக் கொண்டுவந்து, சரியான பாடத்தைக் கற்பிக்கவேண்டும். கோழைகளல்ல நாம்; வீரர்கள்! திறனில்லாதவர்களல்ல நாம்; திறம் படைத்த தோளினர். , வெற்றியே கண்ட வாளும், வாகை மாலையும் சூடியவர்கள் நாம்! இதை உணராதவர்களுக்கு உண்மையைப் புகட்டவேண்டும்- சிங்கத்தினிடம் சிறுநரியின் சீற்றம்! கூடல்மாநகரில், கொடுங்கோலனின் கூற்று.

வீரர்களே! வேங்கைபோல் வீறிட்டெழுங்கள்! இன்று நீங்கள் சிந்துகின்ற ஒவ்வொரு துளி ரத்தமும், ஒவ்வொரு நாடித் துடிப்பும் நம் நாட்டு மக்களின் வீரத்தை நன்கு விளக்கவேண்டும். இப்போதே புறப்படட்டும், நால்வகைப் படைகளும்! படையும் கொடையும், குடையும் முரசும் வெளியகற்றுங்கள்! விஷயம் தெரியாமல் விஷமத்தைஉண்டாக்கியவர்கள் களத்திலே சந்திக்கட்டும்! பாண்டியனின் பரம்பரைகள் நாம். நாளை காலை கயற்கொடி களத்திலே பறக்கட்டும்!'' என்று வீர வார்த்தைகளோடு காரி, அவையைவிட்டு அகல்கிறான். மாவீரர்கள் துடிதுடித்த நெஞ்சத்தோடு தம்தம் இல்லத்தை நோக்கிச் செல்கின்றனர்.

மறுநாள் காலை இரு படைகளும் களத்திலே சந்திக்கின்றன. நீண்ட போர்! யாருக்கு வெற்றி எவருக்குத் தோல்வி? என்று அறிய முடியா வண்ணம் பெரும்போர்! ஓய்வுகொண்டிருந்த வாட்கள், ஒன்றோடொன்றுஉராய்கின்றன. சில மணி நேரத்திற்கெல்லாம் காரி கீழே விழுகிறான். படைக்கஞ்சாத நெஞ்சுரம் படைத்த பாவலன் மார்பின்கண் புண்பட்டு கீழே விழுகிறான். எங்கு பார்த்தாலும் ஒரே அமளி! காரியாதியான் இறந்தான் என்ற செய்தி, நாடெங்கும் பரவுகிறது.

இச்செய்தியைக் கேட்ட மக்கள், அவனது புகழை - அவனதுபெருமையைப் அவனது வீரத்தைப் பற்றி கல்லில் செதுக்கி அதனை நாட்டில் ஒவ்வொரு மூலையிலும் நட்டு, வழிபடுகின்றனர். மல்லி நகரமே அழுகையோடு மிளிர்கிறது.

பல மாதங்களுக்குப் பின் ஆவூர் மூலங்கிழார், காரியாதியைக் காண வேண்டுமென மல்லிக்கு வருகிறார். அரண்மனையில் நுழைகிறார். அங்குள்ள காவலாளர் களெல்லாம் சோர்வான முகத்தோடு இருப்பதைப் பார்க்கிறார். அரண்மனையே அழுகற்று ஊதையோ ஒரு பெரும் பொருளைப் பரிகொடுத்தபடி காட்சியளிப்பதைக் கண்டு சுற்றுமுற்றும் பார்க்கிறார். அவர் கண்களுக்கு எல்லாம் சோகமயமாகவே தோன்றுகின்றன. அமைச்சரைக் காண்கிறார்.

''கொற்றவனின் துணைவனே! எங்கே அந்த வள்ளல்பெருமான்?' என்று மூலங்கிழார் கேட்கிறார். அதற்கு அமைச்சன், 'புலவர் பெருமானே! மண்ணிலே தோன்றியபடி மண்ணிலே மறைந்துவிட்டார் எம்மன்னர் என்று கூறுகிறார்.

இச்செய்தியைக் கேட்டவுடன், புலவரின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகக் கீழே விழுகிறது. "காரியாதி ம்றைந்துவிட்டானா? அந்த நல்லவன் நாட்டை விட்டுப் பிரிந்துவிட்டானா? என் கண்கள் மயங்குகிறதே! என் கண்ணினுள்ளே இருக்கும் கருமணிகள் இருளைக்காட்டுகிறதே! முன்புவரும்

(9ம் பக்கம் பார்க்க)

பெரும் பயணம்

: கண்ணதாசன் :

3—12—1939

"விரிவாக்கும் சட்டந்தான் போயிற்றன்றி
விளைத்திட்ட களைநீக்க முயன்றாரில்லை;
உருவாக்கும் புதுத்திட்டம், சிறிதுகூட
உவகைக்குத் துணைபோகவில்லை! ஆக
திறங்காக்கும் தமிழா நீ போர்க்களத்தில்
திரும்பச் சென்றடித்தற்குத் தயங்காதே" என்(று)
அறங்காக்கும் தலைவோர் சொன் மாரிதேக்கி
அனைவோரும் 'எதிர்நாள்' கொண்டாடுகின்றார்!

10—12—1939

'தமிழ் நாடு தமிழர்க்கே' நாள் கொண்டாடித்
தனி நாட்டு நியாயாசை வெளிப்படுத்தி
அமிழ்தாகும் தென்னர் நாடானந்தத்தில்
ஆடிற்றும்; பாடிற்றும்; வடவோர் உள்ளம்,
"தமிழாளர் துயிலார்! நம் சுரண்டல் வாழ்வு
தரைமட்டம் ஆகும்!" என்றஞ்சிச்சாக,
கமழ் வாசம் தமிழ் வாசம் ஒன்றேயாக
கவின் நாடு முழுதும் இந்நாள் கொண்டாடும்!

18—12—1939

இறப்பாரும் பிறப்பாரும் நித்தநித்தம்
எண்ணற்றார்! என்றாலும், அவர்களுள்ளே
இறப்பாலும் பிறப்பார்கள் சிலரே! நித்தம்
இருப்பாரும் சிறப்பாரும் குறைவே! வீரச்
சிறப்பால் நின்றிருப்பார்கள் சிலரே! அந்தச்
சிலபேரில் முதல்வர் நம் பெரியார்! அன்னார்
பிறப்பெண்ணித் திருநாடு "பிறந்த நா"ளைப்
பிழையற்ற மகிழ்வோடும் கொண்டாடிற்றும்!

31—12—1939

வரலாற்றழகு மறையா அழகாய்
வடிவங்காட்டும் திருநகர்க் காஞ்சி
பல்லவர் ஆட்சிப் பாங்கு முழங்கும்
சித்திர சிற்பச் சீர்த்திகள் மிக்க
தொன்னகர், அறிஞர் தோயும் பொன்னூர்
தன்னிற் குழுமிய தகையோர் கூட்டம்
பன்னீர்ச் செல்வப் பண்பினர் தலைமையில்
"இந்தி ஒழிப்பு! இல்லையேற்சாவு!"
என்னமுழங்கும்! எல்லவர் உள்ளும்
அன்னதே முடிவாய் ஆரவாரிக்கும்!
ஆங்கே,
மாறுகொள் நெஞ்சோ எதிர்படுமதியோ
வேறுபடுணர்வோ விதிரப்புறும் பயமோ
ஆறுதல் சினமெனும் ஆமையுணர்ச்சியோ
சீறிச் சிறையிடைச் சிதைவுறுவோமெனும்
நரம்புத்தளர்வோ நடுக்கமோ குலைவோ
நெல் மூக்களவும் நில்லாதாக
கொல்வாள் தூக்கிக் கோட்டையுட்பாயும்
குணமே மீதுற ஒரு குடிமக்கள்
கட்டித் தழுவலும் களக்கதை பேசலும்
கண்டோர் நெஞ்சம் களிப்புறத்தோற்றும்!
புவிக்கோர் அறிஞன் பூந்தமிழ்ச் செல்வன்
கவிக் காடென்னக் கற்றுளவித்தகன்
நாவலன் பாவலன் நல்லிசைப் புலவன்
உருவில் உரத்தில் ஆண்மகனேனும்
உள்ளப் பாங்கிற் பெண்மையின் நளினக்
கலைகளும் தேர்ந்த காஞ்சிப் பெருமகன்
அண்ணாத்துரைப் பெயர்த்திண்ணார் தளபதி
அண்ணாவும்,
இராவணப் பெரியார்க் கிலக்கணங் கூறும்
தராதலத்துறுசகலரும் புகழும்
வடிவினன்-மனத்தினன்-குணத்தினன்-நடத்தையன்
பன்னீர்ச் செல்வப்பனி மொழியானும்
வதிந்தனர்; மற்றும் வந்தநன் வீரர்
திருப்பெயர் முற்றும் செப்புவன் கேளீர்!

இட்லரின் காதலியர்!

(சென்ற இதழ் தொடர்ச்சி)

காதல் பரிசு!

ஏவாவாவது தப்பிப் பிழைத்தாளா என்றால், அதுதான் இல்லை. அவளும், அவளுக்கு முன்னவள் காட்டிய வழியைத்தான் பின்பற்றினாள். 1932-ல் ஒரு நாள் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டாள். அவளுக்குக் கடைசி நேரத்தில் சிகிச்சை செய்த டாக்டர் பிளேட் என்பவர். அவள் இட்லரின்மீது கொண்டிருந்த தீவிர காதலும், இட்லர் அதை அலட்சியம் செய்ததும்வான் என்று அவளே சொன்னதாகத் தெரிவித்தார்.

இட்லர் இதை ஒப்புக்கொள்ள மறுத்தான். 'என் காதலுக்காக அவள் தற்கொலை செய்துகொண்டதாகச் சொன்னால், அதற்கு நான் எப்படிப் பொறுப்பாளியாக முடியும். நான் அவளைக் காதலிக்கச் சொல்லவுமில்லை' நானே அவளைக் காதலிக்கவுமில்லை என்றான்.

இந்தப் பழி உங்களைச் சேராது என்று ஆறுதல் கூறிய ஆப்மனிடம், எதிர்காலத்தில் இன்னும் இப்படி ஏதாவது நேராது என்பது என்ன நிச்சயம்?" என்று கேட்டான்.

அதற்குப் பின்னும் தப்பிப் பிழைத்த ஏவாவை அவன் விடவில்லை. பெர்டஸ்காடனில் அவனும் அவளும் உல்லாசமாகப் பொழுது போக்கியதிலும் குறை உல்லை. அங்கே இருந்த ஃபிராரோபலுக்கும் ஏவாவுக்கும் இருந்த உரசலும் இட்லருக்குத் தெரியும். குடும்ப விவகாரத்தில் அக்கறை காட்டும் வழக்கமே இல்லாத இட்லர் அதைக் காதில் போட்டுக்கொள்ளக் கூடத் தயாராயில்லை. பிராரோபல், அங்கிருக்கப் பிடிக்காமல் புறப்பட்டபோது, அதைத் தடுக்கவும் இல்லை அவன். அதற்குப்பின் அவள் மியூனிச்சில் வசித்தாள். 1945-ல் உயிர் துறந்தாள். கடைசி காலத்தில் இட்லர் ஏவாவைக் காதலித்தது மட்டுமல்ல, கல்யாணமும் செய்துகொண்டாள். 'ஜெர்மனி என் மனைவி!" என்று சொல்லி வந்த இட்லர், 1945-ல் பெர்லினில் ஏவாவைத் தன் மனைவியாக ஏற்றுக்கொண்டான்.

இன்னும் இருக்கிறது!

ரோபல், ஏவா, மட்டும்தானா. இட்லரின் 'கரதல்' இலாகாவில் வந்து போனவர்கள்? (ஏவா போவில்லை!) பிரபல இசைப்புலவன் 'வேக்னரின்' மனைவி, தன் கணவன் மறைவுக்குப் பின், இட்லரோடு உறவு பூண்டிருந்தது உலகறிந்த இரகசியம்,

ஆரியப் பெண்மை'

பாய்ரூத் பண்டிகையில் கலந்துகொள்ளத் தவறியதே யில்லை. இட்லர் பண்டிகையின்போதுதான், பிரிட்டினைச் சேர்ந்த யூனிடி மிட்ஃபோர்டைச் சந்தித்தான், அவளை 'ஆரியப் பெண்மையின் பரிபூரண உருவகம்' என்று அவளை வர்ணித்தான் இட்லர். இது ஏவாவுக்கு ஆத்திர மூட்டியது, அவளை 'அப்பழுக்கில்லாத பெண்மையின் வடிவம்' என்று கூறும் இட்லருக்கு அவளை 'ஏவா' எப்படி வர்ணித்தாள் என்பது தெரியாது!

அடுத்தடுத்து இருவரும் சந்தித்தனர். அதன் பலனாக, யூனிடி இட்லரின் கொள்கைகளில் தன் மதியைப் பறிகொடுத்தாள். இட்லரைப் பாராட்டினான். கண்ணை மூடிகொண்டு அவனைப் பின்பற்றினாள். அவளது குருட்டுப் பக்தியைத் தனக்கு சாதனமாகப் பயன்படுத்திக் கொண்டான் இட்லர். 'ஆரியப்பெண்மையின் உதாரண அவளைப் பாராட்டும்போதே, அவள் சிறந்த பிரசாரக் கருவியாகப் பயன்படுவாள் என்பதைக் கண்டுகொண்டான். அவள் ஜெர்மனிக்கு வந்தபோதெல்லாம், இட்லரின் வட்டாரத்தில் காணப்பட்டாள். அவளிடம் பிரிட்டனைப் புகழ்ந்து பேசினான்; பிரிட்டனுக்கும் - ஜெர்மனிக்கும் அழிக்க முடியாத ஐக்கியத்தை ஏற்படுத்த முடியும் என்று அவளைக் கனவு காணச் செய்தான்.

1939-ல், யுத்தம் ஆரம்பமாகும் அந்தத் தருவாயில்கூட அனிபி ஜெர்மனிக்கு வருவதைத் தடுக்கவில்லை. செப்டம்பர் மாதத்தில் யுத்தம் ஆரம்பமாகும்போது அவள் மியூனிச்சில் இருந்தாள். இட்லர் அவளுக்கு அளித்த நாஜிச் சின்னத்தை அவள் பெருமையுடன் அணிந்துகொண்டாள். அவளுக்கு ஒரு உல்லாச மாளிகையும், சிறிய காரும் கொடுக்கப்பட்டன.

இரண்டாவது பலி

ஜெர்மனியில் அவள் வசிப்பதை யாரும் தடை செய்யாத போதிலும் அவளை வேவுக்காரர்கள் கண்காணித்து வந்தனர். ஒரு வேளை அவள் பிரிட்டிஷ் உளவாளியாகக் கூட இருக்கலாம் என்பது அவர்கள் சந்தேகம்,

அவளை வெளியேறும்படிக் கூறியபோது, அவள் போக மறுத்தாள். தன் கனவு பலிக்காததனால் மனமுடைந்து போனாள் யூனிடி. சுபாவத்திலேயே உணர்ச்சி வசப்பட்டவளான அவள், இந்த ஏமாற்றத்தைத் தாங்கமாட்டாமல், முன்னோர் சென்ற வழியிலேயே சென்றாள். ஒரே ஒரு வித்தியாசம். அவர்கள் மார்புக்குக் குறி வைத்தார்கள். இவள் தலைக்குக் குறி வைத்தாள். செப்டம்பர் மாதம் எட்டாம் தேதி, மியூனிச் நகரத்தின் அழகான பூங்கா ஒன்றில், யூனிடி தன்னைத் தானே சுட்டுக் கொண்டாள். ஆனால் சாகவில்லை.

ஜெர்மனியின் சிறந்த டாக்டர்களைக் கொண்டு அவளுக்கு வைத்தியம் செய்வித்தான் இட்லர். நாள்தோறும் பலவகைப் பூக்களை அவளுக்கு அன்பளிப்பாக அனுப்பிவந்தான். அவளது கட்டிலுக்கெதிரே அவனது கையெழுத்திட்ட புகைப்படத்தைத்தான் அந்த நேரத்தில் பார்த்துக்கொண்டிருந்தாள். அவன் நேரில் போகவே யில்லை. அவள் பலமுறை வருவாறு அழைத்தும், அவன் அவளைச் சந்திக்கவேயில்லை. அவளைக் கைவிடவுமில்லை,

அவளுக்காக ஏற்பாடு செய்த விசேஷ ரயிலில், தனது சொந்த டாக்டர் ஒருவரது துணையுடன் அவளை ஸ்விட்சர்லாந்துக்கு அனுப்பி வைத்தான். 1940, ஜனவரியில் அவள் இங்கிலாந்தில் தன் வீடு போய்ச் சேர்ந்தாள். வரையில் குணமடையாத அவள், 1948-ல் தனது முப்பத்து மூன்றாவது வயதில் உயிர் நீத்தாள்.

மரணத்தின் உருவம்

யூனிடியின் தற்கொலை முயற்சி, இட்லரையே கலங்கச் செய்தது. போதும் என்பது கோழைத்தனம் என்ற சித்தாந்தத்துடன், பேராசை பிடர் பிடித்துத் தள்ள ஜெகமஞ்சப் போரிட்ட அந்த தீரன், 'போதும்... போதும்...பெண்கள் சகவாசம் போதும்...என்று கதறினான். எதற்கும் எவருக்கும் அஞ்சாத வைர நெஞ்சம் படைத்த இட்லர் பெண்கள் என்ற பெயரைக் கேட்டாலே அஞ்சினான்; நடுங்கினான்.

எந்தப் பெண்ணின் விஷயத்திலாவது நான் சற்று அக்கறை காட்டினால், மரணத்தின் நிழல் அவள் மீது படிந்து வருகிறது. படிந்து விடுகிறது. பரிவான பார்வை, இதய பூர்வமான அன்பளிப்பு, இவைகளைத் தவறாகப் புரிந்துகொள்ளும் பெண்கள் என்னைக் காதலிக்கத் துவங்கி மரணத்தோடு கைகுலுக்கி விடுவார்கள். என் வாழ்வு முழுவதும், எந்தப் பெண்ணும் என்னால் அதிர்ஷ்டத்தையோ ஆனந்தத்தையோ கண்டதில்லை. என்னைக் காதலிக்கும் பெண்ணுக்கு நான் மரணத்தின் உருவம்' என்று சோகத்தால் சாம்பிப்போன இட்லர் ஆப்மனிடம் வாய்விட்டுச் சொல்லி அழுதான்.

அதை அவன் சொல்வானேன்? ரோபலின் தற்கொலை; ஏவாவின் தற்கொலை முயற்சி; யுனிடியின் சோகக் கதை, இவையெல்லாம் நமக்கு அதைத் தானே சொல்கின்றன.

தென்றல்

பொங்கல் மலரில்

★

அறிஞர் அண்ணா

டாக்டர். மா. இராசமணிக்கனார், M.A., M.O.L.,ph.D.
பன்மொழிப்புலவர் அப்பாத்துரையார், M.A.L.T;M.O.L.
பெரும்புலவர் ஔவை சு. துரைசாமியார்.
தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம்,
பேராசிரியர் க. அன்பழகன், M.A.
சொல்லின் செல்வர் சம்பத்,
அ. மு. பரமசிவானந்தம், B.O.L.

அ. பொன்னம்பலனார்,	கவிஞர் சாமிபழனியப்பன்,
இராம. அரங்கண்ணல்,	எஸ். எஸ். தென்னரசு,
தில்லை வில்லாளன், M.A.	வி. சிவப்பிரகாசம், B.A.
ஏ. கோவிந்தசாமி, M.L.A.	பூ. கணேசன், M.A.
என். வி. நடராசன்,	கலைவாணர் கிருஷ்ணன்,
ஏ. வி. பி. ஆசைத்தம்பி,	வித்வான் தமிழண்ணல்,
புலவர் ஏ. கே. வேலன்,	இராசு. தங்கப்பழம்,
இராதாமணாளன்,	சத்தியவாணிமுத்து,
ஈழத்து அடிகள், B.A.	மெ. சுந்திரம், B.O.L.
அருண்மொழி, B.O.L.	எம். எஸ். சிவசாமி,
கவிஞர் வாணிதாசன்,	ப. கண்ணன்,
கவிஞர் முடியரசன்,	என். வி. கலைமணி,

வலம்புரி சோமநாதன்.

முதலிய தமிழ்ப்பெருமக்கள் வரைகின்றனர்.

அத்துடன்

கண்ணதாசனும் எழுதுகிறார்.

விலை அணா எட்டு.

தென்றல் : : சென்னை-14.

அழகிரி மன்றம், இலவச இரவுபள்ளி நிதிக்காக

19—12—54 ஞாயிறு மாலை 6-மணிக்கு
திருவல்லிக்கேணி கலா மண்டபத்தில்
கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் முன்னிலையில்
வளையாபதி நாடக மன்றத்தாரின்

"அந்தப்புரம்"

(நாடகம்)

கதை, வசனம்: எஸ். பி. நாதன்
நடிப்பவர்கள்:
G. முத்துகிருஷ்ணன், ரேவதி, C. R. ராஜகுமாரி,
M. K. கோவிந்தராஜன், S. S. கதிரேசன், S. R. தசரதன்,
K. பங்காரு, O. A. K. தேவர், A. N. கிருஷ்ணன்.
கட்டணம் ரூ 1, அணா 8.

பர்மியத் தலைநகரில் பயங்கரக் கொலை!

3

பயங்கர சம்பவங்களை உயிரோட்டமாகக் கொண்டு செல்லும் கதைகளில் சிலருக்கு தணியாத ஆசை! சோக நிகழ்ச்சிகள் பின்னப்பட்டிருக்கும் கதையெனிலோ, ஒரே மூச்சில் படித்து முடிக்கும்பொழுது ஒரு சொட்டு கண்ணீர் விட்டு விட்டுத்தான் புத்தகத்தை மூடிவைப்பர் பலர், இருள் சூழ்ந்த அந்தக் குகையில் அலாவுதீன் தேம்பிக்கொண் டிருந்தான். திடீரென ஒரு சப்தம்! பாறை பிளந்து சரிந்தது...இப்படி துவக்கப்படும் கதைகளில் சிலருக்கு உயிர். காரணம் பயங்கர சம்பவங்களிலும் - அவபலத்திலும்கூட சுவை காணுகிறது மனித உள்ளம். சில ஆண்டுகளுக்குமுன் பர்மாவில் நடந்த படுகொலை, உலகின் கவனத்தையே கவர்ந்துவிட்டது. இப்படியும் நடந்ததா? என்று வியப்பு மேலிட்டனர். நினைத்தாலே நெஞ்சு திடுக்கிடும் சம்பவம் 19-7-1947-ல் பர்மாவில் நடந்தது. பட்டப்பகலில் மந்திரிசபை நடந்துகொண் டிருக்கும்பொழுதே எழு மந்திரிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். கொலை செய்த கூட்டத்தின் தலைவனும் ஒரு மந்திரி. பெயர் கலூன் ஊசோ! இந்தப் படுகொலை - இந்திய உபகண்டத்தில் காந்தியார் கொல்லப்பட்ட சம்பவம் தந்த அதிர்ச்சியைவிடப் பெரியது; காந்தியார் கொல்லப்பட்டபின் இந்திய உபகண்டத்தின் அரசியல் தெளிவும் - பொலிவும் கெட்டு - சீரழிந்து வருவதுபோல - பர்மா அரசியலிலும் இந்த படுகொலைக்குப் பிறகு சீரழிவு ஏற்பட்டது. பர்மாவில் நடந்த அந்தப் படுகொலை-அதன் வழக்கு-தீர்ப்பு முதலியவற்றை பல ஆங்கில வெளியீடுகளிலிருந்தும் - செய்தித்தாள்களிலிருந்தும் - புத்தகங்களிலிருந்தும் இங்கே தொகுத்துத் தருகிறோம். தொடர்ந்தும் தருவோம். பழைய சம்பவங்கள்தான் என்றாலும் மீண்டும் ஒரு முறை நினைவிற்கு கொண்டுவந்து நிறுத்திப்பார்ப்போமே! சுவை இல்லாமலா போய்விடும்!

இன்று ஊசோவுடன் சேர்ந்து வாதாடுவதாகக் குறிப்பிட்டிருந்த தேட்நீ, யான்ஜீ அவுங், மவுன்சோ, மொவுன்ஜீ முதலியோர் ஒரு பகுதியாக காலை 9-45 மணிக்கு கொண்டு வரப்பட்டனர். ஊசோவுடன் சேர்ந்து வாதாட மறுத்த செய்ன்ஜீ, தூகா, கீன்மவுன்யீன், மவுன்யீ முதலியோர் ஒரு பகுதியாக சரியாக 10-மணிக்குக் கொண்டு வரப்பட்டு தனியாக வைக்கப்பட்டனர்.

மிஸ்டர் வெர்ட்டானஸ் சரியாக 9-50 மணிக்கு வந்தார். முதல் நம்பர் குற்றவாளியான ஊசோ முன்போலவே அழகிய பர்மிய ஆடையுடன் முகமலர்ச்சி இல்லாது சரியாக 10-5க்கு கொண்டு வரப்பட்டார். மற்றும் லாயர் தாராவடி ஊசாவின், ஜோபிங்காங் ஊத்தெய்ன் சோ குற்றவாளிகளுக்காக ஆஜராயிருந்தனர்.

ஊசோ மகள் பேபிசோ, மாமனார் ஊலூகலே, மற்றும் சில உறவினரும் வந்திருந்தனர். அயல் நாட்டுப் பத்திரிகை நிருபர்களும், உள்நாட்டு பத்திரிகை நிருபர்களுமாக சுமார் 40 பேர் வரையில் வந்திருந்தனர். இன்சீன் ஜெயிலைச் சுற்றிலும் விசாரணை செய்யும் கட்டிடத்தைச் சுற்றிலும் பலவிதமான ஆயுதங்களைத் தாங்கிய போலீசாரும், மிலிடேரியரும் காவல் புரிந்து வந்தனர். சரியாக 10-10 மணிக்கு நீதிபதிகள் அவர்களுடைய ஸ்தானங்களில் வந்தமர்ந்து வழக்கு விசாரணையை ஆரம்பித்தார்கள்.

கோர்ட் கூடியதும் பிரதம நீதிபதி, கவர்ன்மெண்ட் அட்வகேட், ஊசோ, மிஸ்டர் வெர்ட்டானஸ் ஆகியோருக்கிடையில் பின்கண்டவாறு உரையாடல் நடைபெற்றது:—

நீதிபதி:—குற்றவாளிகளுக்கு வக்கீல்கள் ஏற்பாடாகி விட்டதா?

அட்வகேட்:—6-ம் நெம்பர் குற்றவாளி தூகா தெரிவித்த பிரகாரம் லாயர் ஊபாடுன் என்பவரைச் சர்க்கார் ஏற்படுத்தியுள்ளனர்.

நீதிபதி:—ஊசோர்வுக்கு லாயர் ஏற்பாடாகிவிட்டதா?

ஊசோ:—ஆம், மிஸ்டர் வெர்ட்டானஸ் அவர்களே, தாங்கள் ஊஸோ தரப்பில் வாதாடச் சம்மதமா?

வெட்டர்னஸ்:—நான் தற்சமயம் பர்மாவிற்கு வியாபாரி என்ற முறையில் வந்துள்ளேன். ஆனால் நான் இங்கிருக்கும் வரையில் ஊசோவுக்காக வாதாட தீர்மானித்துள்ளேன்.

நீதிபதி:—தாங்கள் தெரிவித்த பிரகாரம் வாதாடலாம்! போக விரும்பிய காலத்தில் போய் விடலாம். மற்றும் தாராவாடி ஊசான்வின், ஜோபிங்காங் ஊத்தெய்ன்ச்சோ ஆகிய இருவரும் தங்களுடன் சேர்ந்து வாதாடுவார்களல்லவா?

வெட்டானஸ்:—ஆம், அவர்கள் இரண்டுபேரும் மற்ற குற்றவாளியாகிய தேட்நீ, மவுன்சோ, யான்ஜீ அவுங், மொவுன்ஜீ ஆகியோர்களுக்காக வாதாடுவார்கள்.

நீதிபதி:—அவர் குறிப்பிட்ட நான்கு பேர்களுக்கும் சம்மதமா?

நாலு குற்றவாளிகள்:— ஆம், சம்மதம்.

உடனே கவர்ன்மென்ட் அட்வேகேட் ஊடுன்பியூ அவர்கள் எழுந்து கொலை வழக்கு முழு விபரங்களையும் ஆதியோடந்தமாக பின் வருமாறு எடுத்துரைத்தார்:—

கனம் கோர்ட்டாரவர்களே, இவ்வழக்கில் முதல் நம்பர் குற்றவாளியாகிய ஊசோ இவருடைய மனைவிக்கு மருமகனாகிய கீன்மவுயீன் என்பவனை கையாளாக வைத்துக் கொண்டு, மந்திரிமார்களை கொலை செய்வதற்காக திட்டம் போட்டு வந்தார். 18-9-47-ந் தேதி இரவு 8-மணிக்கு, அவர் வீட்டில் மவுன்சோ தூகா, கூடி மறுநாள் மந்திரிசபை கூட்டத்தில் மந்திரிமார்களை சுட்டுக் கொல்வதென்று தீர்மானித்தார்கள். அப்பொழுது பாலூன் என்பவர் (அப்ரூவர்) அவ்விடத்தில் இருந்தார், தக்கீன் நூவையும் சுட்டுக்கொன்றுவிட வேண்டுமென ஊசோ கண்டிப்பாக எச்சரிக்கை செய்தார். அதேமறுநாள் 19-9-47 ந் தேதி அதிகாலையில் கீன்மவுன்யீன் என்பவனை அனுப்பி ஜீப் காரும் ராணுவ உடைகளும் கொண்டுவரும்படி ஊசோ உத்திரவிட்டார். மேற்படி சாமான்கள் கொண்டுவரப்பட்டவுடன் கீன்மவுன்யீன், மவுன்நீ, பானுன் மொவின்ஜீ ஆகியோர்களை காலை சுமார் 8-30 மணிக்கு **R.A.** 3123 நம்பருள்ள ஜீப் காரில் மந்திரிசபைக் கூட்டம் நடைபெறுகிறதா தக்கீன் நூ வருகிறாரா என்று பார்த்து தகவல் கொடுத்தனுப்பும்படி ஊசோ அனுப்பிவைத்தார். மேற்கண்ட 4 பேரும் ஊசோ சொன்னபடி ஜீப் காரில் சென்று, 41-ம் நம்பர் கல்லி முகனையில் ஜீப் காரை நிறுத்தி விட்டு, செக்ரெடேரியட் கட்டிடத்திற்குள் நுழைந்து பார்த்தபொழுது கூட்டம் அன்று நடக்குமென்று தெரிந்தவுடன், மொவுன்ஜீயை சட்டசபை அறைக்குப் பக்கத்தில் காவல் வைத்துவிட்டு, கூட்டம் நடக்கப் போகிறதாக உடனே ஊசோவுக்குத் தெரிவித்தான். இத்தகவலைக் கேட்ட ஊசோ உடனே மவுன்கோ, தேட்நீ, செயின்ஜீ ஆகிய மூன்று பேர் வசம் டாமிகன்னும், யான்ஜீ அவுங் வசம் ஸ்டேன் கன்னும் கொடுத்து தூகா என்பவனை ஜீப் காரை ஓட்டும்படி செய்து "கடைசி தவணையில் கண்டிப்பாக காரியத்தை முடித்து விடவேண்டும்" என்று சொல்லி அனுப்பி வைத்தார். மேற்கண்ட 5 பேரும் 12-வது ஆர்மி உடையுடன் ஆர். ஸி. 1814-ம் நெம்பர் ஜீப் காரில் புறப்பட்டு செக்ரட்டேரியட் கட்டிடத்திற்குள் நுழைந்து, தூகா என்பவனை ஜீப் காரில் ஸ்பார்க் வீதியில் வைத்திருக்கும்படி சொல்லிவிட்டு, தென்மேற்கிலுள்ள சீடி வழியாக மேல் மாடிக்கு போய் தக்கீன் நூவின் அறையைப் பார்த்து விட்டு, மந்திரிசபை கூட்டம் நடந்த அறைக்குள் காவலாளி தடுத்தும், பலாத்காரமாக உள் நுழைந்து விட்டனர். உடனே அக்கோஷ்டிக்குத் தலைவனாக வந்து மவுங்சோ என்பவன் சுடு, சுடு என்று சொன்னவுடன், 4 பேரும் சுட்டார்கள். அவுங்சான் உள்பட எல்லா மந்திரிமார்களும் சுடப்பட்டுக் கீழே விழுந்தவுடன், சுட்டவர்கள் அங்கிருந்து வெளியேறிவிட்டனர். துப்பாக்கி சப்தம் கேட்டு மில்டர் ஜாக்கின் மெய்க்காப்பாளரான மவுங்டுவே என்பவர்பக்கத் தரையிலிருந்துவேகமாக வருவதைக் கண்டதும் யான்ஜீ அவுங் என்பவன் எதிரிகள் செக்ரட்டேரியட் கட்டிடத்தை விட்டு வெளியேறி, வெளியிலிருந்த ஜீப்காரில் புறப்பட்டு ஊசோ வீட்டிற்கு சென்றுவிட்டனர். இவர்களைப் பார்த்த ஊசோ 'காரியத்தை முடித்து விட்டீர்களா' என்று கேட்டுக்கொண்டே அவர்களைச் சந்தித்து, காரியம் முடிந்துவிட்டதென்று தெரிந்தவுடன் "அவுன்பீ" (வெற்றியடைந்தேன்) என்று சொல்லிக்கொண்டே சந்தோஷத்துடன் அவர்களைஅழைத்துச் சென்றார். கொஞ்ச நேரம் சென்று செக்ரட்டேரியட் வெளியில் நின்று கொண்டு காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்த கீமவுன்யீன் கோஷ்டியினர் வந்தனர். அவர்களைப்பார்த்த ஊசோ "தக்கீன் நூ சமாசாரம் எப்படி" என்று கேட்டபொழுது பானூன் (அப்ரூவர்) "இன்று கூட்டத்திற்கு தக்கீன் நூ வரவில்லை" என்று தெரிவித்தான். உடனே மொவுன்ஜீ, கீன்மவுன்யீன் ஆகிய இரண்டு பேரையும் ஆயுதங்களுடன் கேட் வாசலைக்காவல் செய்யும்படி செய்துவிட்டு, ஊசோ வீடடிற்குள் மற்றவர்களுடன் சந்தோஷ ஆரவாரங்களைச் செய்துகொண்டிருந்தார்.

சரியாக பிற்பகல் 3 மணிக்கு போலீசார் ஊசோ வீட்டை வளைத்துக் கொண்டபொழுது, வயலில் காவலிருந்த மொவுன்ஜீ முதலில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தான். எனினும் போலீசார் பலாத்காரமாக உள் நுழைந்து பார்த்தபொழுது, ஜீப் காரின் கலர் மாறியும், நம்பர் மாறியும் காணப்பட்டது. போலீசார் உடனே ஊசோவையும் அங்கிருந்த எல்லோரையும் கைது செய்தார்கள். மறுநாள் (20-9-47) ஊசோ வீட்டிற்கு பின்னால் தண்ணீருக்குள் டாமிகன்னும், ஸ்டென்கன்னும் கண்டுபிடிக்கப்பட்டன அதே ஆயுதங்களால் தான் மந்திரிமார்களை சுட்டுக் கொன்றதாக தெரிய வந்தது. மந்திரிமார்கள் சுடப்பட்ட இடத்தை போலீசார் முதலில் சென்று பார்வையிட்டனர். போலீஸ் சுமிஷனர் ஊஅவுன் செய்ன் சுடப்பட்ட அறையினுள் மந்திரி டீடோ ஊபாச்சோ குற்றுயிராய் இருந்ததை கண்டான்.

நீதிபதி:— ஊஒன்மவுங், ஐ.சி.எஸ்., சங்கதி என்ன?

அட்வகேட்:— ஊஒன்மவுங்கும் மந்திரிமார்களுடன் சுடப்பட்டு இறந்து விட்டார்.

நீதிபதி:—வழக்கு விவகாரங்களை இனிமேல் பர்மிய மொழியில் நடத்தினால் மற்ற குற்றவாளிகளும் தெரிந்து கொள்ள முடியும்.

கவர்ன்மெண்ட் அட்வகேட் இவ்வாறு சொல்லி முடிந்ததும், போலீஸ்கமிஷனர் ஊஅவுன்செய்ன் சரியாக 11-15 மணிக்கு விசாரிக்கப்பட்டார்.

அட்வோகேட்:—நீங்கள் தானா இவ்வழக்கைத் தாக்கல் செய்தவர்?

போலீஸ் கமிஷனர்:—ஆம்.

அட்வோகேட்:—இவ்வழக்கு சம்பந்தமாக தங்களுக்கு தெரிந்தவற்றை சொல்லலாம்,

போ. கமிஷனர்:—1947-ம் வருடம் ஜூலை 19-ந் தேதி காலை 10-மணிக்கு நான் செக்ரட்டேரியட் கட்டிடத்தின் கீழ் மாடியிலுள்ள போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் காரியாலயத்தில் இருந்தேன். அப்பொழுது துப்பாக்கிப் பிரயோகமும், மக்கள் பீதிகொண்டு ஓடுவதையும் பார்த்து வெளியில் வந்து பார்த்தேன். உடனேகுண்டுசப்தம்கேட்டது.

(தொடரும்)

சென்ற இதழில்...

மினிக்கிட்டுக் கொண்டிருந்த வெளிச்சத்தைப் பின் தொடர்ந்தான் தளநாயகன். அது ஒரு விருந்து வட்டத்திற்குள் அவனைக்கொண்டு போய் விட்டது. அந்த ஒளி அந்த விருந்து வட்டத்தில் கலந்தது. அது ஒரு பெண்ணாகத்தான் இருக்க வேண்டுமென்று சந்தேகித்தான். ஒரு நாட்டியக்காரியை 'ஏய்-யார் நீ!' என்று மிரட்டினான்.

இராசேந்திரன் தளநாயகனை காரணம் கேட்டான். நடந்ததை விளக்கினான். இடைதுறையானிடம் அந்தப் பெண்ணை ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டான். அவன் முகம் கருத்தது. ஒரு இடத்தில் "அன்னை வாழ்க!" என்றால் உலகெல்லாமா கேட்கும்? பித்தன் நீ, என்றான் இராசேந்திரன். தளநாயகன் துயிலும் போது எந்தப்பெண்ணை அவன் சந்தேகித்தானே அவள் அவன் எதிரில் நின்றாள். புஞ்சராயரின் மகள் தரங்கிணி தாய் இழந்தவள். அவள் அரிசங்கமனைக் காதலித்தாள். இருவருக்கும் பிறந்த குழந்தைதான் மரகதம்.

மரகதம் நந்தினியைத் தேடினாள். கிடைக்கவில்லை. திட்டம் தொலைந்து போனது என்று கருவினான் அரிசங்கமன். தந்தையின் போக்கு மரகதத்திற்கு புரியவில்லை. நந்தினி எங்கே போனாள். யாராவது தூக்கிப்போய் இருப்பார்களோ? 'அன்னை வாழ்க' என்ற ஏடு அங்கே இருக்கக் காரணம் என்ன? நந்தினி போனதற்கு அப்பா ஆத்திரப் படுவானேன்?

தளநாயகன் எழுந்தான். அந்தப் பெண் அத்தான் என்றாள். என்னை இப்பொழுது யாருக்கும் காட்டிக் கொடுக்க வேண்டாம் என்றாள். உண்மையைச் சொல்லத் தான் வந்தேன் என்றாள். தளநாயகன் அவளை விட்டு விட்டான். தளநாயகன் ஓடினான். இராசேந்திரனை தட்டி எழுப்பினான். அப்பொழுதே அந்த இடைதுறையான் ஒளிந்து கொண்டான்.

"மன்னா இடைதுறையானைக் கைது செய்யவேண்டும்! என்று கத்தினான் தளநாயகன்.

'அடிப்பாவி' என்று முணுமுணுத்து விட்டு இடைதுறையான் அந்தப்புரம் நோக்கி நடந்தான்......

7

அன்னை வேண்டுமா? அத்தான் வேண்டுமா?

> பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த
> நன்மை பயக்கும் மெனின். —வள்ளுவர்.

மூன்றும் பகுதியில், நந்தினியிடம் ஒரு பெண் அவசரமாக ஓடி வந்து ஓலைகொடுத்ததும் கதவருகில் சப்தம் கேட்டதும், வந்தவள் மென்று விழுங்கிப் பேசியதும் கூறினோம்.

ஐந்தாம் பகுதியில், நந்தினியைக் காணாமல் அவள் தோழி மரகதம் வருந்தியது கூறினோம். நந்தினி எங்கே சென்றாள்! என்ன ஆயிற்று......

வந்த பெண் கொடுத்த ஓலையில் பின் கண்டவாறு எழுதப் பெற்றிருந்தது :

" கண்மணி நந்தினிக்கு,

நலம்.

உனைக் காணாமல் ஓடி மறைந்த ஆண்டுகள் பலவற்றில் எதுவும் உன்னை என் இதயத்திலிருந்து எடுத்து விட முடியவில்லை. இத்தனை ஆண்டுகளில்உன்னைக்காணத் துடியாய்த் துடித்தேன். சூழ்நிலை என்னைத் தடுத்து விட்டது. இப்போது உன்னை எப்படியும் என்னோடு வைத்துக் கொள்வது என்று முடிவு கட்டி விட்டேன். வரும் சகோதரியோடு புறப்பட்டு வந்து சேரவும்.

உன் அன்னை "

ஓலையைப் படித்த நந்தினிக்கு ஒன்றுமே புரியவில்லை. வந்த பெண்ணை ஏற இறங்கப் பார்த்தாள். அந்தப் பார்வை "உன்னை நம்பலாமா?" என்று கேட்பதுபோல் இருந்தது. இந்த நேரத்தில் வாசல் பக்கத்துச் சுவற்றில், யாரோ மெல்லத் தட்டுவது போல் இருந்தது. வந்த பெண், சிரித்தபடி நந்தினி பக்கத்தில் அமர்ந்தாள்.

"சந்தேகப் படாதே! உன் அன்னை எழுதிய கடிதம்தான். நீ இல்லாமல் அவர்கள் எவ்வளவு துயரப் படுகிறார்கள் தெரியுமா?... உம்...பேசிக் கொண்டிருக்க நேரமில்லை. உடனே புறப்படு."

நந்தினியால் இதை நம்ப முடியவில்லை. ஒரு பெண்ணை அனுப்பி அழைத்து வரச்சொல்லும் அளவுக்கு வசதியிருந்தால் இது நாள் வரை, அன்னை, அதை என் செய்யவில்லை? இப்போது திடீரென்று அதைச் செய்யவேண்டிய அவசியம் என்ன வந்தது? அன்னை என்ன, எந்த நாட்டையாவது ஆண்டு கொண்டிருக்கிறாளா? இல்லை! இது ஏதோ மாயம்! தளநாயகன் இல்லை என்பதறிந்து, (அன்னையைக் கவர்ந்த சூதர்கள்) என்னையும் கவர நினைக்கிறார்கள்! என்று நந்தினி எண்ணமிட்டாள். வந்த பெண்ணோ, புன்னகையோடிருந்தாள்.

"இல்லை! போய்விடு! நீ மாயக்காரி! கள்வர் கூட்டத்தைச் சேர்ந்தவள் போல் இருக்கிறது. நான் உன்னை நம்புவதற்கில்லை. போய் விடு" என்று கத்தினாள். வந்த பெண், "வாதத்திற்கு நேரமில்லை. வருகிறாயா, இல்லையா?" என்று பயமுறுத்தினாள்.

"நான் சத்தம் போடுவேன்!" என்று கூறி, நந்தினி, சத்தமிட வாயைத் திறந்த போது, சிறிதும் எதிர்பாராதவிதமாக, வந்த பெண் ஒரு மூலிகையை, அவள் முகத்தில் போட்டு, கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். சில விநாடிகளில் நந்தினி மூர்ச்சையுற்றாள். நாலைந்து வீரர்கள் உள்ளே புகுந்து நந்தினியைத் தூக்கிக்கொண்டு வெளியேறினர். அடுத்த கட்டிலே நுழைந்து பார்த்த அந்தப்பெண், கணக்காயன் மரணமுற்றுக் கிடப்பதைக் கண்டாள். அவனையும் தூக்கி ரதத்தில் போட்டபடி எல்லோரும் புறப்பட்டனர். வெளியிலே இந்த அமளியைக் கண்ட சிலரும், வாய்மூடி இருந்தனர். காரணம், வந்த வீரர்கள் அனைவரும் சோழ நாட்டு வீரர்கள் போலவே உடையணிந்து தோற்றமளித்ததாகும். ரதத்தில் ஏறும்போது, அந்தப் பெண் வீசியெறிந்த ஓலை நறுக்குத்தான் மரகதத்தின் கையில் கிடைத்தது......

★

ரதம் வெகுவேகமாக நகரத்தின் எல்லையைக் கடந்தது. வேகத்தால் ஏற்படும் அசைவுகள் ரதத்தில் இருப்பவர்களைக் குலுக்கி எடுத்தன. மூர்ச்சையாகிக் கிடந்த நந்தினியும் உயிரற்றுக் கிடந்த கணக்காயன் உடலும் அந்த ஆட்டங்களால் பாதிக்கப்படாதவாறு வீரர்கள் பாதுகாத்தனர். ரதம், எல்லையைக் கடந்து வெகுதூரம வந்த பிறகே இருட்ட ஆரம்பித்தது. சில்லென்று குளிர் காற்று வீசத் துவங்கியது. லேசாக மழைத்துளிகள்விழ ஆரம்பித்தன. மூர்ச்சையுற்றுக் கிடந்த நந்தினி கண் விழித்தாள். சுற்று முற்றும் பார்த்தாள். ஒரு பெண்ணின்

மடியில் தன் தலை இருப்பதை உணர்ந்தாள். அவள் உடல் நடுங்கியது. இருளில், நந்தினி கண் விழித்ததை, அந்தப் பெண் உணரவில்லை, நந்தினி தலையைத் தூக்கியபோதுதான் அவள் உணர்ந்தாள். அவள் வரய் திறப்பதற்குள், நந்தினி, "அத்தான்!" என்று கூவினாள். அவள் வாயைப் பொத்தியவாறு, வந்த பெண், "அத்தான் வேண்டுமா? அன்னை வேண்டுமா?" என்று கேட்டாள். "எனக்கு அத்தான் தான் வேண்டும். அன்னை இருப்பதாக நீங்கள் சொல்வது பொய். அன்னையின் கதை தெரிந்து என்னை ஏமாற்றுகிறீர்கள்! என்னை விட்டு விடுங்கள்! காட்டு மிருகங்களுக்கு இரையாகி விட்டாலும் கவலை இல்லை. என்னைக் கெடுத்து விடாதீர்கள். உங்களை வணங்குகிறேன்" என்று நந்தினி பொறுமினாள்.

இவளுக்கு விளங்க வைப்பது சிரமம் என்று கண்டுகொண்ட அந்தப் பெண், சிறிதும் தயக்கம் இன்றி மறுபடியும் மூலிகையை பிரயோகித்தாள். சிறிது நேரம் தெளிவுடன் இருந்த நந்தினி, மீண்டும் மூர்ச்சையுற்றாள்.

ரதம், ஆலங்காட்டின் அருகில் வந்தபோது பலபலவென்று பொழுது விடிய ஆரம்பித்தது. அது வரையில் இருந்த அமைதி அழியத் தொடங்கியது. ஆலங்காட்டிலே, இராசேந்திரன் கண்ட கூட்டத்தார் துயில்நீங்கி நடமாட ஆரம்பித்தனர். பல் துலக்குவாரும், சுள்ளிகளைக் கொண்டு தீ மூட்டுவாரும் வாள் சுழற்றிப் பயிற்சி செய்வாருமாக அந்த இடம் சலசலப்பாகத் தோன்றியது. ரதம் அங்கு வந்து நின்றவுடன் அத்தனை பேரும் ரதத்தைச் சூழ்ந்து கொண்டனர். அப்போதும் நந்தினி மூர்ச்சையுற்றுத்தான் கிடந்தாள். ரதத்தில் வந்த வீரர்களும் பெண்ணும் கீழே இறங்கி, நந்தினியையும் கீழே இறக்கினார்கள். சுற்றிலும் நின்ற பெண்கள், நந்தினியின் உடலைத்தொட்டு "அன்னை வாழ்க!" என்று கூவினர். ஆனந்தக் கூத்தாடினர். அவளது முகத்தைக் கூர்ந்து பார்த்தனர். "அன்னை போலவே இருக்கிறாள்!" என்றனர். கணக்காயன் உடலும் கீழே இறக்கப்பட்டது.

தூரத்தில் கருநாக மங்கை வருவது தெரிந்து கூட்டம் ஒதுங்கி வழி விட்டது. நேரே, அவள் நந்தினி அருகில் வந்தாள். அவள் உடலைத் தொட்டு, "அன்னை வாழ்க!" என்று கூறி சிறிது நேரம் மௌனமாய் நின்றாள். பிறகு ஒரு பெண்ணிடம் ஏதோ சாடை காட்டினாள். அந்தப்பெண் ஓடிப்போய் ஒரு மூலிகை கொண்டு வந்தாள். அதை, நந்தினியின் மூக்கில் காட்டியவுடன் நந்தினி கண் விழித்தாள். கருநாகமங்கை, அந்த மூலிகையை, கணக்காயன் அருகில் கொண்டு போகும்போது, ஒருத்தி "அம்மா! அவர் இறந்து விட்டார்!" என்றாள். கருநாக மங்கையின் முகம் சிவந்தது.

"காயங்கூடப்படக் கூடாது என்றேனே; ஏன் கொன்றீர்கள்?" என்று கத்தினாள். வந்தபெண், நடுக்கத்தோடு, "நாங்கள் கொல்லவில்லை. அவர், தானே இறந்து கிடந்தார்!" என்று மெல்லக்கூறினாள். கருநாக மங்கை யோசித்து, அதை ஒப்புக் கொண்டவள் போல் தலையை ஆட்டினாள். அவள் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் விழுந்தது.

நந்தினி எழுந்தாள். சுற்றி நின்றோரைப் பார்த்தாள். அவள் முகம் வெளிறியது. மெய், வியர்த்தது. குனிந்து கணக்காயனைப் பார்த்தாள். "அப்பா" என்று அலறினாள், அவன் மீது சாய்ந்தாள். புரண்டு அழுதாள். எழுந்தாள். கண்கள் கனல் கக்கின.

"பாதகர்களே! என் தந்தையைக் கொன்று விட்டீர்களே! இருந்த ஒரு துணையும் போய்விட்டதே! கீழ்த்தரமானவர்களே! உங்களுக்கு ஏன் இந்தக் கெடுமதி! சப்தமில்லாமல் வாழ்ந்தோமே! யாருக்கு என்ன தீங்கிழைத்தோம்! என் தந்தையை ஏன் கொன்றீர்கள்!" என்று விம்மினாள்.

கருநாக மங்கை அவளை சமாதானப்படுத்த முயன்றாள்.

"அம்மா! முழுதும் தெரிந்து கொள். அவர் இயற்கையாகவே மரணம் அடைந்து கிடந்தாராம். அன்னை, அவரது உடலையாவது காணட்டும் என்று எடுத்து வைத்திருக்கிறார்கள். எங்களுக்கில்லையா, கவலை!" என்றாள்.

நந்தினி எள்ளிச்சிரித்தாள். அழுகின்றபோது சிரிப்பு! அது பயங்கரமாகக் காட்சியளித்தது!

"என்ன தயாளம்! எத்தர்கள் நீங்கள்! பொய் சொல்வதைக் கலையாகக் கற்றிருக்கிறீர்கள்! சண்டாளர்கள்! சதிகாரர்கள்!" என்று கத்தினாள்.

கருநாக மங்கை, அவள் முகத்தில் கை சேர்த்து. "மகளே! நான் சொல்வதை நம்பு! நாங்களும் உன் அன்னையின் குழந்தைகள்தான். முழுதும்சொல்கிறேன்;வா!" என்று அவளை அணைத்தபடி நடந்தாள். இரு வீரர்கள் கணக்காயன் உடலைத் தூக்கிவர, மற்றப்பெண்களும் வீரர்களும் பின் தொடர, எல்லோரும் கீழ் மாளிகைக்கு வந்தனர்.

கீழ் மாளிகைக்குள் வந்ததும், நந்தினி, மிகப் பெரியதும் பயங்கரமாகத் தோற்றமளித்ததுமான ஒரு நாக சிங்காதனத்தைக் கண்டாள். நாகத்தின் படத்திலேயே சாய்ந்து கொள்ளக் கூடிய முறையில் அது அமைக்கப்பட்டிருந்தது. சுற்றிலும் பளபளப்பான சிலைகள் 'பளிச்' சென்று மின்னின, நந்தினி பயந்தபடி நின்றாள். கருநாக மங்கை, அவளைக் கைத்தாங்கலாக அழைத்துப் போய் சிங்காதனத்தில் உட்காரவைத்தாள். பின்னாலிருந்த நாகபடம் ஆடியது. நந்தினி, தன்னை அறியாமல் கூவி விட்டாள். கருநாகமங்கை, அவள் தோளில் கை வைத்து அமைதிப்படுத்தினாள்; பிறகு கூட்டத்தைப் பார்த்துப் பேசினாள்.

"நமது அன்னையின் கண்மணியைக் காணப்பெற்றதற்கு நாம்



மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். அன்னை இட்ட கட்டளையில் ஒரு பகுதியை நிறைவேற்றி விட்டோம். இனி, கண்மணியை அன்னையிடம் சேர்க்கவேண்டிய பொறுப்பு இருக்கிறது. அதையும் செய்து, நமது கொள்கையிலும் வெற்றிபெற்று விட்டோமானால், இதுவரை நாம் பட்ட துயரங்களுக்கெல்லாம் முடிவு ஏற்படுவதோடு, சோழமண்டலத்திற்கு நிரந்தரமானநல்வாழ்வைத் தந்த பெருமையும் கிடைக்கும். சோழ சிங்காதனத்தை, சூழ்ச்சியால் கவர நினைத்த தீயவர்களை நாம் அழித்தோம் என்று வரலாறு கூறும். அன்னை வாழ்க!" என்று முடித்தாள்.

நந்தினிக்கு எல்லாம் குழப்பமாக இருந்தது. "சோழநாட்டிற்கு இப்போது என்ன வந்தது. சூதாவது, சூழ்ச்சியாவது! இவர்களெல்லாம் ஒருவேளை பைத்தியக்காரர்களாக இருக்கலாமோ? காட்டுக்குள் உட்கார்ந்துகொண்டு சோழ நாட்டை காப்பாற்றப் போகிறார்களாம். அதில் என் அன்னையின் பெயரை வேறு அனாவசியமாக இழுக்கிறார்கள். என்ன இது!" என்று எண்ணமிட்டாள்.

அதற்குள் சில பெண்கள், தட்டுகளில் பழங்களை கொண்டுவந்து நந்தினியின்முன் வைத்துவிட்டுப் பணிவோடு நின்றார்கள். நந்தினி, அந்தக் குழப்பத்திலும், தான் உயர்ந்த இடத்தில் வைக்கப்பட்டிருப்பதால் தனக்குத் தீங்கிருக்காதுஎன்ற நம்பிக்கையில் அமைதி பெற்று, பழங்களை உண்ண ஆரம்பித்தாள். கூட்டம் வெளியிற் சென்றது. கருநாக மங்கை, கணக்காயன் உடலை, மூலிகைகளால் பத்திரப் படுத்துமாறு வீரர்களிடம் கூறிவிட்டு, நந்தினியின் பக்கத்தில் உட்கார்ந்து வரலாறு கூறத் துவங்கினாள்.

கருநாக மங்கை இவள்தான்!

8

அத்தானைக் காண்போமா? அன்பு மொழி கேட்போமா?

தாயிருக்கையில் தனமிருக்கையில்
சஞ்சலமென்னடிமானே!—நல்ல
பாயிருக்கையில் புழுதித் தரையில் படுத்துப் புரளும் தேனே!
வாயிருக்கையில் கேளடிநல்ல வானநிலவும்
கொடுப்பேன்!—இன்று
நீயிருக்கிறநிலை சகியேன்! நிலத்தினில் உயிர்விடுப்பேன்!
சின்ன இடுப்பு நெளிவதென்ன சித்திரப்
புழுப்போலே!—அடி
கன்னி உனக்குக் கசந்ததுவோ காய்ச்சிய பசும்பாலே!
—பாரதிதாசன்

கருநாக மங்கை சொன்ன வரலாற்றைக் கேட்ட நந்தினி, உற்சாகக் கடலில்மிதந்தாள். நீண்டகாலமாகக் காணாத தாயைக் காணப் போகிறோம் என்ற மகிழ்ச்சி, கட்டுக்கடங்காமல் பெருகியது. தாய் எப்படி இருப்பாளோ என்று கற்பனை செய்ய ஆரம்பித்தாள். (தொடரும்)

எதிர்பாராதது

ஜோதிநிலாவானம்! முல்லைப் பூக்களை அள்ளித் தூவியதுபோல் நட்சத்திரங்கள் வானவெளியில் சிதறிக் கிடந்தன. இளந்தென்றல் தவழ்ந்துகொண்டிருந்தது. 'சந்தோஷம் வேண்டுமென்றால் இங்கே கொஞ்சம் என்னைப் பாரு கண்ணாலே !" காற்றிலே மிதந்து வந்த இந்தக் கீதம் அவனைக் கவர்ந்தது. எழுந்தான், இப்படியும் அப்படியுமாக நடந்தான். அவன் தன் கரங்களால் முகவாய்க்கட்டையை ஒருமுறைகசக்கிக் கொண்டான். அவன் கண்களில் ஒரு ஒளி மின்னலிட்டது. சடசடவென்று குளிக்கும் அறைக்குள் நுழைந்தான். மூன்று முறை முகத்தை வாசனைசோப்பால் கழுவிக்கொண்டான்.நல்லஉயர்ந்த ஆடைகளை உடுத்திக்கொண்டான். வாசனைத் தைலங்களை எடுத்துப் பூசிக்கொண்டான். அலை அலையாக கிராப்பை ஒருமுறை வாரிவிட்டுக் கொண்டான். கீதம் மிதந்து வந்த திசையை நோக்கி விரைந்தான். அவன் நடை உடை பாவனைகளைப் பார்த்தவர்கள் அவனை ஒரு சீமான் வீட்டுச் செல்லப்பிள்ளை என்று உடனே சொல்லிவிடுவார்கள். அவ்வளவு கவர்ச்சிகரமான தோற்றத்துடன் காட்சியளித்தான் அந்த வாலிபன். அவன் அந்த ஊராருக்கே புதிராக காட்சியளித்துக் கொண்டிருந்தான், யார் ? எங்கிருந்துவந்தவன்? என்னதொழில் செய்கிறன்? எப்படி இவ்வளவு ஆடம்பரமாகச் செலவு செய்து ஆனந்த வாழ்க்கை நடத்துகிறன்? இப்படிப் பல கேள்விகள் அவனைப் பற்றி எழுந்தன. ஆனல் அவனை இன்றளவும் யாரும் நேராகக் கேட்டதில்லை. அவன் முடுக்கு மற்றவர்கள் அவனை நெருங்க விடாமல் பயமுறுத்திற்று.

◉

"மாதம் முன்னூறு ரூபாயாவது பிடிக்குமே அவன் நடத்துகின்ற ஆடம்பர வாழ்க்கைக்கு"

"அட! யாரப்பா நீ! முன்னூறு ரூபாய் பிடிக்கும் என்று சொல்கிறய். அவன் ஊதித் தள்ளும் சிகரெட்டே நூறு ரூபாய் ஆகிவிடுமே !"

"சில்க்சட்டையைதவிர வேறென்றும் அவன் போட்டதை நான் ஒருநாள்கூட பார்க்கவே இல்லையே."

"அவன் வீதியிலே நடந்தால் அப்பப்பா...கம் மென்ற வாசனை காற்றுடன் கலந்து வீசும். ஒரு நாள் வாழ்ந்தாலும் இப்படி வாழ்ந்துவிட்டு சாகவேண்டும்."

"ஆமப்பா! வாழ்க்கை என்றல் இதுதானே வாழ்க்கை. நாம்நடத்துகிறேமே உப்புசப்பில்லாமல்இதெல்லாம் வாழ்க்கையாகி விடுமா ?"

"எத்தனை மோதிரம் பார்த்தாயா அவன் விரல்களில் அத்தனையும் வைரங்களாக இருக்குமோ"

"எல்லாமே வைரமல்ல. தங்க மோதிரம்கூட ஒன்று போட்டிருப்கிறன்.

"எது இவ்வளவும் அவனுக்கு"

"ஒருவேளை வைர வியாபாரியாக இருக்குமோ"

"இருக்குமப்மா! மாதத்தில் இருபது நாட்கள் அவன் ஊரிலேயே தங்குவதில்லையே !"

"என்'டா! உனக்கேதாவதுதெரியுமா' அவனைப் பற்றி

"ஒன்றும் தெரியவில்லை. யாருடனும் அவன் பேசுவதில்லை"

"ஒன்றுமே புரியவில்லை !"

"ஒரே புதிராகக் காட்சி யளிக்கிறன்."

◉

இப்படி ஊரில் அவனைப் பற்றிய பேச்சாகவே இருந்தது. அவன்நடத்துகின்ற வாழ்க்கை எல்லோருக்கும் ஆச்சரியமாகவே இருந்தது.

ஆனல் ஒரு செய்தி மட்டும் எட்டியது. அதாவது மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு ஒருமுறை மோதிரங்களைக் 'கட்டிப்பொன்னக' மாற்றி சென்னையில்கொண்டுபோய் விற்று வருவதாகக் கிடைத்த செய்தி. அதுவும் அந்த ஊர் பொற்கொல்லன் ஒருவன் மூலம் இந்த ரகசியம் ஊரெங்கும் பரவிற்று. ஆனலும் நமக்கென்ன நாதன்விட்ட வழி. அவனவன் தலையெழுத்து. வினை விதைப்பவன் தினையையா அறுவடை செய்யப் போகிறன் என்று பழக்கப்பட்ட பல்லவியுடன் அந்த ஊர் மக்கள் வாய்மூடிக் கிடந்தனர்.

★

புரியாத மனிதனக காட்சியளித்த அந்தஇளைஞன் பெயர் **நீதிமாணிக்கம்**. அறையைவிட்டு வெளிக்கிளம்பிய அவன் ஒரு சினிமா தியேட்டரை நெருங்கிவிட்டான். ஜனக்கூட்டம் எக்கச்சக்கமாக இருந்தது. கீழ் வகுப்பு டிகெட்டுகள் முடிந்துவிட்டன. அப்பொழுதும் கூட்டம் குறையவில்லை.

ஒரு பெண்!ஆடையைவெறுக்கும் ஆரணங்குகளின் கூட்டத்தைச் சேர்ந்தவள். அரை நிர்வாணம் தான் நாகரிகத்தின் மேற்படி என்று எண்ணுபவள். தன்னை அழகு படுத்திக்கொண்டு கையில் ஒரு 'பிளாஸ்'டிக் பையுடன் அந்தக் கூட்டத்திற்கிடையே இப்படியும் அப்படியுமாக அலைந்துகொண்டிருந்தாள். அவள் சுழலும் இரண்டு விழிகள் அந்தக் கூட்டத்தில் இருந்த அத்தனைப் பேரையும் ஒருமுறைப் பார்த்துவிட்டிருக்கும். சாதாரண அழகுடையவர்கள்கூட 'மெர்குரி' வெளிச்சத்தின்கீழ் 'ஓவர்' அழகிகளாக மாறிடுவர். அந்த நவநாகரீக நங்கையும் அப்படித்தான் அந்தநேரத்தில் காணப்பட்டாள். நீதிமாணிக்கத்தை அந்த நங்கை ஓரக்கண்களால் பார்த்துக் கொண்டு ஒருமுறை அவனைக் கடந்து சென்றள். மீண்டும் ஒருமுறை;இருமுறை மும்முறை.முதல் முறை வெறும் பார்வை; இரண்டாவது முறை அவள் பார்க்கும் போது அந்தப் பார்வையிலேயே கொஞ்சம் பரிவை வரவழைத்துக் கொண்டாள். மூன்றவது முறை லேசாக உதட்டைக் கிழித்து சிரித்தாள்.

நீதிமாணிக்கம் மெல்ல அவளைப் பின்தொடர்ந்தான். அவள் தியேடரின் முகப்பில் போடப்பட்டிருந்த ஒரு நாற்காலியில் ஒய்யாரமாகப் போய் அமர்ந்தாள். இன்னும் கொஞ்ச நேரமே இருந்தது படம் ஆரம்பிக்க. படம் ஒரு ஆங்கிலப் படம். திருவாளர். **'கைதி'** எழுதிய **'திருடர்கள் அறை'** லண்டன்'பிக் கடலியில்' பிரமாதமாக ஓடிய படமாம் அது!

புரிகிறதோ புரியவில்லையோ ஆடை நெகிழும் காட்சிகள்எத்தனை. முத்தம்தரும்காதல் 'குளோசப்கள்' எவ்வளவு. இதைக் கணக்கிடத்தானே நம்மவரில் பலர் ஆங்கிலப் படங்களுக்கு போகின்றனர். படம் பார்க்கும் அத்தனை பேருக்குமா கதை வசனம் புரிகிறது- பாவம் பரிதாபத்திற் குரியவர்கள். ஆனல் சில பிரகிருதிகள் இருக்கின்றன. புரியாவிட்டாலும் புரிந்துகொண்டவர்கள்போல நடிப்பவர்கள். ரசிகர்கள் சிரித்தால் இவர்களும் சிரிப்பார்கள். ரசிகர்கள் 'த்சு' கொட்டினல் இவர்களும் 'த்சு' கொட்டுவார்கள். இந்த ரகத்தைச் சார்ந்தவர்கள்தான். நீதிமாணிக்கமும், அந்த அறை நிர்வாண நாகரீகப் பெண்ணும்.

நீதிமாணிக்கம் அவள் எதிரில் போய் உட்கார்ந்தான். வராத சிரிப்பை வலிய வரவழைத்துக் கொண்டான்.

"சே! சே! ஒரே 'கிரௌடு' **(Crowed)** நீதிமாணிக்கம் தனக்குள் சொன்னன்.

'எஸ். டூ-மச்' அவள் ஆமாம் போட்டாள். இப்படி ஆரம்பமாயிற்று அவர்கள் உறையாடல் அந்த சில நிமிடங்களில் பம்பாயிக்குப் போய் லண்டன் - பாரிஸ் - ரோம், ஆலிவுட்' இப்படி எங்கெங்கோ சென்று திரும்பிவிட்டனர்.

நீதிமாணிக்கத்தின் தலைக்கு மேல் ஒரு மரப்பலகை தொங்கிக் கொண்டிருந்தது. அதில் **'திருடர்கள் ஜாக்கிரதை'** என்று கொட்டை எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது.

"சொசைட்டி ரொம்ப கெட்டுப் போச்சு'! திடீரென்று இப்படியொரு தத்துவத்தை தூக்கிப்போட்டாள் அவள்.

"ஏன் திடீரென்று இப்படி" என்றன் நீதிமாணிக்கம்.

"ஒன்றுமில்லை ! அதோ பாருங்கள் உங்கள் தலைக்குமேலே"என்று ஆள்காட்டி விரலால் சுட்டிக்காட்டியதும் தன் கைவிரலில் அவள் போட்டிருந்த ஒரு மஞ்சள்நிற மோதிரத்தை தடவிப் பார்த்துக் கொண்டாள்.

நீதிமாணிக்கம் திரும்பிப் பார்த்தான். தலைக்குமேல் திருடர்கள் ஜாக்கிரதை என்று கொட்டை எழுத்துக்களில் போர்டு தொங்கவிட்டிருப்பதைக் கண்டான். அவன் முகத்தில் அசடு வழிந்தது. போயியும் போய் இந்த இடத்தில் வந்து உட்கார்ந்தோமே என்று தன்னைத் தான் நொந்துகொண்டான். "ஒருவேளை...சே! சே! இருக்காது... இப்பொழுதுதானே இவளை சந்திக்கிறேம். ஒரு ஆறுதல். என்ன இருந்தாலும் உள்ளுக்குள் அவனை ஒரு பயம் கவ்விக்கொண்டது.

"ஆமராம்! ஆமாம்!" என்று அவன் சொன்னன். ஆனல் அந்த வார்த்தைகளில் உயிர் இல்லை. அவனும் தன் விரலில் இருந்த மஞ்சள்நிற மோதிரத்தை ஒருமுறைத் தடவிப் பார்த்துக்கொண்டான்.

நேரமாகி விட்டதே...படம் ஆரம்பமாகிவிடும் என்று கூறிவிட்டு அவள் எழுந்தாள், நீதிமாணிக்கம். 'ஓபர்காட்' என்று சொல்லியபடியே எழுந்தான். யார் டிக்கெட் வாங்குவது. ஒருவர்க்கொருவர் முந்தினர்.

கடைசியில் நீதிமாணிக்கம் இரண்டு முதல் வகுப்பு டிகெட் வாங்கினன். இருவரும் ஒருவர் பக்கத்தில் ஒருவர் உட்கார்ந்தனர், விளக்கு அணைந்தது! தியேடர் இருண்டது! இருவருக்கும்இருந்த இடைவெளி குறைந்தது! கதையில் காதலன் தன் காதலியை முத்தமிடுகிறன். அந்தப் பெண்ணின் மென்கரங்கள் நீதிமாணிக்கத்தின் கரங்களை மெல்ல வருடிற்று. இவனும் அவள் கரத்தை மெல்லப் பிடித்தான். லேசாக அழுத்தவும் செய்தான். நீதிமாணிக்கத்திற்கு நெஞ்சு 'படக்' 'படக்' கென்று அடித்துக்கொண்டது. உணர்ச்சிப் பெருக்கால் ஊற்றெடுத்த உமிழ் நீரை ஒருமுறை விழுங்கிக்கொண்டான். '**உன்** பெயர்' மெள்ள இவன் கேட்டான். மேனகா என்றள் அந்த மயக்குமொழிக்காரி!

"மேனகா - மைடார்லிங். இனி நீதான் என் உயிர் - உடல் - ஆவி எல்லாம்...படம் நடந்துகொண்டே இருக்கிறது. இங்கே இவர்களின் காதல் நாடகமும் 'டெம்போ'வுடன் ஓடிக்கொண்டிருக்கிறது.

தியேடரில் திடீரென்று ஒரே கூச்சல் 'விசில்' அடிக்கத்தெரிந்த பயல்களெல்லாம் வாய்கிழிய கத்தினர்கள். 'ஆஸ் ஊஸ்' இப்படிப் பல ரகக்கூக்சல்கள் எழுந்து காதைத் துளைத்தது. இவ்வளவு ஆர்பாட்டத்திற்கும் காரணம் படத்தில் கதாநாயகியை கதாநாயகன் கட்டியணைத்து முத்தமிட்டான். அவ்வளவுதான். கூச்சலோடு கூச்சலாய் நீதிமாணிக்கம்தன்காதலியை அணைத்து ஒரு முத்தம். அந்த இருட்டில் யாருக்குத் தெரியப் போகிறது. இப்படி காதல் முற்றிற்று. படமும் முற்றிற்று. தியேடரைவிட்டு எல்லோரும் வெளியேறிவிட்டனர். நீதிமாணிக்கமும் அவன் சினிமாக் காதலி மேனகாவும் முதலில் உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்தார்கள்.

'மேனகா மீண்டும் உன்னை எப்போது சந்திப்பது என்றன்.'

"பக்கத்து ஊரில்தான் நான் இருப்பது, இன்னும் ஒரு வாரத்தில் மீண்டும் இங்கு வருவேன். உங்களைத் தவருமல் சந்திக்கிறேன். நம் திருமணத்தைப் பற்றி அப்பொழுது ஒரு முடிவு கட்டுவோம் என்றள் அந்த மயக்குமொழியாள்.

ஆமாம் மேனகா நீதான் என் வாழ்க்கைத்துணைவியாக இருக்கத் தகுதியுடையவள். உன்னையே ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருப்பேன். தவருமல் ஒரு வாரத்தில் என்னை சந்திக்கவேண்டும், அதற்

ஏ. கே. வில்வம்

குள் நானும் வியாபார விஷயமாய் வெளியூருக்குப்போய் வந்துவிடுகிறேன் என்றன்.

"சரிநேரமாகிறது. வரட்டுமா என் அன்பே என்றள்.

சரி போய்வா...இந்தா மேனகா, நம் அன்பின் அடையாளமாகஇந்த மோதிரத்தை அணிந்துகொள் என்று கூறி தன் விரலில் இருந்த மஞ்சள்நிற மோதிரந்தைக் கழற்றி அவள் விரலில் போட்டான். அவளும் தன் கனிந்த காதலனுக்கு அவள் விரலில் இருந்த ஒரு மோதிரத்தை அன்புக் காணிக்கையாக்கினள் இவனுக்கு- பிறகு பிரிய மனமில்லாதவர்கள்போல் இருவரும் நடித்துப் பிரிந்தனர்.

"நல்ல கனம். நிச்சயம் ஒரு பவுன்' இருக்கும்." நீதிமாணிக்கம் இப்படி நினைத்துக்கொண்டான். தான் பிடித்திருந்தஅறைக்கு வந்து நிம்மதியாகப் படுத்துக் கொண்டான்.

"ஏமாளி பாவம்! ஏமாந்துவிட்டான். ஒரு மாதச் செலவு சரிகட்டிவிடும் எப்படியும் ஒரு பவுனுக்குக் குறையாது" மேனகா என்ற போலிப் பெயரில் இருந்த கரு[illegible] **பாயி** இப்படி தனக்குள் கூறி[illegible]

(9-ம் பக்கம் பார்க்க[illegible]

இலக்கியத்தில் காதல்

—: காரை. முத்துப்புலவர் :—

மாலைப் பொழுது காதலர்களைப் படாதபாடு படுத்துகிறதாம். எல்லாக் கவிஞனும் இதையே கூறுகிருன். ஒவ்வொருவனும் மாலையைப் பற்றிச் சொல்லும் போது நமக்கு மயக்கம் தட்டுகிறது !

மல்லிகையே வெண்சங்கா வண்டுதே வான் கருப்பு
வில்லிகணைதெரிந்து மெய்காப்ப முல்லை மலர்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன் மாலை அந்திப் பொழுது !

என்று, மாலை நேரத்தைப் பற்றி வெளிச்சம் போடுகிருன், புகழேந்தி மாலை நேரம், மெல்ல நடந்து போகிறதாம், அப்போது சில நளின காரியங்கள் நடக்கின்றனவாம். இல்லை ; அந்த நளின காரியங்களைப் பார்த்தபடியே புன் மாலை அந்திப் பொழுது 'மெல்ல' நடந்து போகிறதாம். இதிலேதான் ஒரு வரி பற்றி ஒட்டக் கூத்தவனுக்கும் புகழேந்திக்கும் தகராறு வந்ததாம். மேற்கண்ட வெண்பாவைப் புகழேந்தி பாடியதும் ஒட்டக்கூத்தன் எழுந்தாளும்.

"ஓய் புகழேந்தி ! நிறுத்தும்!''

"ஏன் கூத்தரே ! ஏன் நிறுத்த வேண்டும் ? ''

"மல்லிகையை வெண் சங்காகக் கருதி. வண்டு ஊதுகிறது என்கிறீரே, சங்கின் வாய்ப் பக்கத்தில் அல்லவா ஊதுவார்கள்; வண்டுபின் பக்கமல்லவா ஊதுகிறது ! ஒகோகோ ! ஈகீகீ ! ''

"ஓய் கூத்தரே, சிரிக்காதீர் ! பெரிய தவறைக் கண்டு பிடித்த மாதிரி குதிக்கிறீர் ! வண்டு அங்கே சும்மா ஊதவில்லை ; மதுக் குடித்து விட்டு ஊதுகிறது. குடிகாரனுக்கு முன்பக்க மென்றும் பின் பக்க மென்றும் தெரியவா போகிறது ! ஓகோகோ ! ஈகீகீ ! ''

இப்படிச் சண்டை போட்டார்களாம். அது எப்படித் தொலைந்தாலும், புகழேந்தியின் கற்பனை, மாலை நேரத்தை நன்ருக வருணிக்கிறது ! — அது போதும்.

அதோடு மாலைப் பொழுது காதலர்களைப் பாடுபடுத்துகிறது என்ருமே, அதைப் பார்ப்போம்.

மாலை நேரத்தில் காதலன் பக்கத்தில் இருந்தாள் காதலி. ஆகா மாலைப் பொழுதே, நீ தேன் ! பால் பழம் ! சர்க்கரை 'கற்கண்டு' : ரசம் மோர் ! தயிர் !'' என்றெல்லாம் பாராட்டுகிருள். கணவன் பிரிந்து சென்று விட்டால், "ஊகா மாலைப் பொழுதே ! நீ நஞ்சு! வேம்பு ! கசப்பு ! மிளகாய் வற்றல் ! '' என்றெல்லாம் தூற்றுகிருள் ! காதலன் வந்த தற்கும் போனதற்கும் மாலை என்ன செய்யமுடியும் ; பாவம்' இதிலே, காதலோடு சேர்ந்து உறவாடி உணர்வு தரும் பொருள்களை கவிஞன் சிறப்பாக சம்பந்தப் படுத்திக் கொள்கிருனே, அது தான் கவிச் சிறப்பு ; "பட்டப் பகல் பனிரெண்டுமணிக்கு காதலிகலங்கிளுள்'' என்று ஏன் சொல்லக் கூடாது ! சொல்லலாம் ! பட்டப் பகலில் காதலி கலங்குவது காதலனுக்காக இருக்காது '' "வெய்யில் என்ன கொளுத்து கொளுத்துகிறது !'' என்ருே, "சமையலுக்கு காய்கறி இல்லையே "என்ருே கலங்குவதாகத் தான் இருக்கும். அப்படியே, ஒரு வேளை காதலனுக்காகக் கலங்கிளுலும், அப்போது இருக்கும் கொதிப்பான சூழ்நிலை, நயமான காதலியாக அவளைக் காட்டாது ! ரொம்ப மோசமான " காமி சத்தியபாமா '' வாகத்தான் காட்டும் ! பின்என்ன ; வெய்யில் சூட்டோடு காதற் சூட்டையும் தேடிளுல், அவள் எப்படி நயமான காதலியாக இருக்க முடியும். அப்படி உள்ள காதலியரை கவிஞன் கருவியாக்கிப் பாடமாட்டான். மாலை இளந்தென்றல் வந்து மேனியைத் தொட்டதும் 'சில்' லென்று உடம்பு குளிர' 'ஆகா' ! இப்போது காதலர் இருந்தால் நம்மைக் கட்டி காற்றுப் புகாமல் - தழுவுவார் ! அப்போது உடம்பு கத கதப்பாக இருக்குமே! என்று நினைக்கும் நினைப்பு இருக்கிறதே, அந்த நினைவோடு ஒரு காதலியை உருவகப்படுத்துவதுதான் நயமான கவிஞனின் பண்பு ! அந்த நேரத்தில் காதலர் இல்லையாளுல் 'ஐயோ ! மாலைப் பொழுதே ! அவர் இல்லாத போது ஏன் இப்படி அவதிப் படுத்துகிருய் ! "என்று காதலியைக் கலங்க வைப்பதும் நல்ல கவிஞனின் பண்புதான் ! இதன்றி, பட்டப் பகலில் கட்டித் தழுவிஞர் ! என்று கூறிளுல், அடுத்த வரியில், வேர்வை நாற்றம் குப்பென்று அடித்தது என்பதையும் கூற வேண்டிவரும் !

மாலை நேரத்தில் ஒரு பெண், நன்ருகக் குளித்து விட்டு, கூந்தல் அப்படியே சரிந்து கிடக்க அல்லது பின்னிக் கிடக்க புதுச் சேலைகட்டிக் கொண்டு, தென்றல் சிலு சிலுப்போடு நின்ருல், எவ்வளவுசுகமான காட்சி கிடைக்கிறது ! அந்த நேரத்தில் அவளது மனோநிலை - அவளது காதலன் பக்கம்இருக்கும். காதலன் வேரிடம் சென்றிருந்தாலும் அவன் மீதுதான் அவள் நினைவு இருக்கும் ! அதை மட்டும் சொன்ருல் கவி நயம் பூர்த்தியாகாது என்பதற்காக மாலைப் பொழுதைத் திட்டுகிருன், கவிஞன்,

இதிலே வள்ளுவன், மாலைப் பொழுதைக் குற்றக் கூண்டில் ஏற்றி பட்பட வென்று குற்றச் சாட்டுகளை வாசிக்கிருன் - வள்ளுவன், காதலிக்கு வக்காலத்து வாங்கி, மாலையைச் சாடுகிருன்.

"ஏ பொழுதே ! திருக்குறள் சட்டத்து இன்பப் பிரிவின் 1221 வது 'செக்ஷன் ' படி உன்னைக் குற்றம் சாட்டுகிறேமன் ! நீ மாலைக் காலம் என்பது பொய். காதலரைப் பிரிந்து வாழும் மாதர்களின் முடிவு காலம் நீ ! ஏ கொலைக்கார மாலைப் பொழுதே ! உன் குற்றத்தின் தன்மையை உணர்ந்தாயா ! நீ செய்தது எவ்வளவு பாதகச்செயல் என்பதை அறிந்தாயா ? ''

" உன்னைக் குற்றம் சாட்டும் போது அதே வேளை உன் துன்பத்தையும் நான் உணர்கிறேன். என் கட்சிக் காரியின் காதலர் போல உன் துணையும் இரக்கமற்றிருக்கிறதே என்பதற்காக அனுதாபப் படுகிறேன்!"

"ஆளுலும், அதற்காக, நீ என் கட்சிக்காரியின் துன்பத்தை மேலும் மேலும் பெருகுவதை நான் கூருமல் முடியாது ! ''

"என் கட்சிகாரியின் காதலர் இல்லாத போது, கொலை செய்யும் இடத்தில் பகைவர் வருவது போல் நீ வருகிருய் ! ''

"அவள், உன் பகையான காலைப் பொழுதிற்குச் செய்த நன்மை என்ன ; உனக்குச் செய்த தீமை என்ன ! ''

"நீ இவ்வளவு கொடுமை செய்வாய் என்பதை, அவள், தன் காதலர் உடனிருக்கும் போது அறியவில்லை. (அறிந்திருந்தால், அவரை விட்டு உன்னைக் கண்டிக்கச் சொல்லி பிறகு அனுப்பியிருப்பாள் ?) ''

மாலையோ அல்லை மணந்தார் உயிருண்ணும்
வேலை நீ வாழி பொழுது !
புன் கண்ணை வாழி மருள் மாலை எம் கேள் போல்
வன் கண்ணதோ நின் துணே!
பனி அரும்பிப்பைதல் கொள் மாலை துனி அரும்பித்
துன்பம் வளர வளரும்!
காதலர் இல்வழி மாலை கொலைக் களத்து
ஏதிலர் போல வரும் !
காலைக்குச் செய்த நன்று என் கொல் எவன் கொல்யான்
மாலைக்குச் செய்த பகை !
மாலைநோய் செய்தல் மறைந்தார் அகலாத
காலை அறிந்தது இலேன் !

எதிர்பாராதது...

(8-ம் பக்கம் தொடர்ச்சி)

கொண்டாள். அவளும் அன்றிரவு நிம்மதியாகத் தூங்கிளுள்.

◉

பொழுது விடிந்தது. நீதிமாணிக்கம் அவசர அவசரமாக எழுந்தான் விரலில் இருந்த மோதிரத்தைக் கழற்றிளுன்.உரைக்கல்லில் உரைத்துப் பார்த்தான். அந்த மோதிரம் பித்தளையாக இருப்பதைக் கண்டான். திடுக்கிட்டுப் போளுன். என்ன செய்வதென்றேபுரியவில்லை. நீதிமாணிக்கம் என்ற பெயரில் மறைந்து கொண்டிருந்த 'கேடி' கந்தசாமிக்கு ; அவன் முகம் சிவந்தது. உடல் சூடேறிற்று பற்களை 'நர நர; வென்று கடித்துக்கொண்டான். கைகளைப் பிசைந்தான். 'கள்ளி - என்னையே ஏய்த்து விட்டாளே ! கந்தசாமி முணு முணுத்தான். அவன் முகத்தில் பிணக்களை வழிந்துகொண்டிருந்தது.

கருப்பாயியின் நிலையும் என்ன வாழ்கிறதாம். மோதிரத்தை உரைத்துப் பார்த்து அசல் பித்தளை என்பதறிந்ததும் துடித்தாள். கொதித்தாள், குதித்தாள், குரங்காட்டம் போட்டாள். அதைத் தவிர அவளால்தான் என்ன செய்யமுடியும். வல்லவனுக்கு - வல்லவி. திருடனுக்கு - திருடியா ? அவளும் எதிர்பார்க்கவில்லை இந்த அதிர்ச்சி தரும் சம்பவத்தை அவனும் எதிர்பார்க்கவில்லை. பொதுவாக இருவரும் எதிர்பாராததுதானே இது ! திருட்டு என்றதும் மக்களின் கவனம் எல்லாம் வரண்ட தலைகளின் மீதும் வற்றிப்போன உடல்களின் மீதும் தானே விழுகிறது. நீதிமாணிக்கம் மேனகா போன்ற நாகரீகத் திருட்டுகள். அதிலும் புதுரகத்தைப் பின்பற்றுவோர்கள். எத்தனை பேர் அறிமுகமாகி இருக்கிருர்கள் நாட்டுக்கு. இவர்களுக்கு சீமான் சீமாட்டி என்று பெயர். பாராட்டுதல் - கீர்த்தி - புகழ் - சமுதாயத்தில் ஒரு உயர்ந்த இடம் எல்லாம் உண்டு இவர்களுக்கு. ஆளுல்... 'அந்த அவர்களுக்கு' கைவிலங்கு தடியடி, ஏச்சு, பேச்சு எல்லாம். ஏன் இந்த நிலை ? யார் காரணம் இவைகளுக்கு. திருடர்கள் ஜாக்கிரதை' என்ற மரப்பலகை அர்த்தமில்லாமல் தொங்கிக்கொண்டிருந்தது அந்த தியேடரில். அதிலிருந்த ஒவ்வொரு எழுத்துக்களும் சமுதாயத்தைப் பார்த்து எள்ளி நகைப்பதைப்போல் காணப்பட்டது.

◉

இலக்கியத்தில்...

(3-ம் பக்கம தொடர்ச்சி)

போது என்னைப்போல் வந்தோர்க்கெல்லாம் சோறு படைத்து, சொந்த வாழ்க்கைக்கு வேண்டியவைகளைக் கொடுத்தனுப்பிய அந்தப் புனிதன் மறைந்துவிட்டாளு ? நீரற்ற ஓடை பயன் படாததைக் கண்டு, அதை நாடாதவர்போல், காரியாதியின் நெடுமனை பொலிவற்றுக் கிடக்கின்றதே. பெருஞ்செல்வ நிலையைக் கண்ட கண்கள் இன்று அச்செல்வப் பெருமானைக் காணுது மயக்குகிறதே ! முடிவேந்தர் மூவரை யொத்தவளுயிற்றே, காரி ! அவளு மறைந்தான் ? முத்தமிழ் வேந்தர் ரெருமனையில் கட்டப்பட்டிருக்கும் மதம்பிடித்தயானைகள், பெருமூச்செறியும் ஓசையைப் போல், முன்பு இவனது பேரில்லத்தில் நெய் உலையில் சொரிந்த ஆட்டிறைச்சியினுடையஓசை இருந்தது. அந்தப் பேரில்லம் பொலிவிழந்து கிடக்கின்றதே ! ஆனிரைகளை மீட்டுக் கொணர வேண்டுமென வீராவேசத்தோடு சென்று, போர் புரிந்து மீட்டுவரும்போது, கரந்தை மாலையை அணியவேண்டிய வேளையில் கொலைகாரர்சுள் குத்திக் கொன்றனரா ? என்ளுல் இச்செய்தியைக்கேட்கமுடியவில்லையே! இளமைப் பருவத்தினளுன அந்தக் குன்றின் விளக்கு, கொடுமையாளர்களின் காற்றுப்பட்டு அணைந்துவிட்டதா ? கணவனை யிழந்த மகளிர் அணிகலன்களைத் துறந்து நிற்பதைப்போ லல்லவா, இப்பெருமானை பேரிருள் கொண்டிருக்கிறது. அய்யோ ! ஆற்றல் படைத்தவனின் நெடுமனையா, இவ்விதம் பொலிவிழந்து கிடப்பது ? காரியாண்ட நாடா, கண்ணீரோடு காட்சியளிப்பது ?'' என்றெல்லாம் அவன் நெடுமனையின்கண் நின்று கதறுகிருர்.

—புறம் - 261

◉

இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு பாடியவர், ஆவூர் மூலங்கிழார். இவர், காலத்திஞற் செய்த நன்றியையும், 'நன்றி மறப்பது நன்றன்று' என்ற கருத்துரைக்கும் ஏற்ப, காரியின் தன்மைகளைச் செய்யுளின் வாயிலாக நமக்கு அறிவிக்கிருர். இதளுல் அக்காலத்தவர், ஒருவனின் தன்மைகளை மறைத்தும், பழித்தும் பேசியது இடையாது என்பது இனிது விளங்கும்.

வே. கபிலன்

'தேன்றல்' விற்பனையாளர்
S. A. சுந்தரம்
பீடா ஷாப்.
தேவால்கத் தெரு,
தார்த்தையங்கார்பேட்டை, P.O.
திருச்சி.

போற்றலும் .. தூற்றலும் !

★அன்புள்ள **கண்ணதாசன்** அவர்களுக்கு,

இந்த வாரம் தென்றல் வாங்கினேன். தேள் கொட்டியது போல் இருந்தது.

'கல்கி' ஒரு எழுத்தாளர். சாதாரண எழுத்தாளர் அல்ல! அம்மாமி நடை எழுத்தாளர். அவர் மறைந்தார். அதற்கு அனுதாபம் தெரிவிக்க வேண்டியதுதான். ஒரு வரியில் கூட அனுதாபம் தெரிவிக்கலாம். தரம் குறைந்து விடாது.

முன்பக்கத்தில் அளவிற்கு மீறி நீங்கள் எழுதியிருக்கிறீர்கள். பொறுத்துக் கொள்ளமுடியவில்லை மாணிக்கங்களுடன் சிறு மணியை ஒப்பிடுவதா ? தகாது அன்பரே! தகாது !

தலையங்கத்தைச் 'சூன்ய' மாக விட்டிருக்கிறீர்கள். தங்களின் இச்செய்கை என்போன்றோரைக்கொதிப்படையச் செய்கிறது. உங்கள் எண்ணத்தைச் சந்தேகிக்கச் செய்கிறது.

இந்த வாரம் 'கல்கி' கூட 'கருப்பு' கலரிட்டுத்தலையங்கம் தீட்டி இருக்கிறது. 'கல்கி' புகைப் படத்தைக் கூட வெளி அட்டையில் போடாமல் உள் பக்கத்தில் போட்டிருக்கிறது. நீங்களோ தகாத காரியம் செய்திருக்கிறீர்கள் தமிழிலக்கியம் செத்து விட்டது போலவும் - அதனுள் நீங்கள் உருகிப் போவதைப் போலவும் அல்லவா இருக்கிறது உங்கள் செய்கை. 'கல்கி' எழுதிய நூற்களில் தமிழ் இலக்கிய வரிசையில் வைத்து எண்ணக் கூடிய ஒரு நூலையாவது காட்ட முடியுமா உங்களால்! வீணுக ஏன் மறைமலை. திரு. வி. க. போன்ற வர்களின் பெயரை இழுத்து இழுக்கு தேடினீர்கள்.

அம்மாமி எடென்று ஒதுக்கப் பட்ட கல்கி, அம்மாமிக் கதைகள் என்று ஒதுக்கப்பட்ட கல்கியின் கதைகள். இவைகளைப் புகழ்கின்றீர்கள். தகாது அன்பரே!

உமது செய்கை கண்டிக்கத் தக்கது! கண்டிக்கத்தக்கது! கண்டிக்கத்தக்கது. மாவீரன் திராவிடத்தின் தனிப்பெரும் தீரன் டாக்டர் டி. எம். நாயர் இங்கல்ல இலண்டனில் இறந்தார். எமகாதகப் பார்ப்பனர்கள் உங்களைப் போல் தலையங்கத்தை மொட்டையடிக்கவில்லை. வெள்ளைக்காரர்கள் சவ அடக்கம் செய்தனர்.

மறைமலை யடிகள் - திரு. வி. க. போன்றவர்கள் இறந்த போது 'கல்கி' இப்படியா தலையங்கத்தை 'மொட்டையடித்தது'.

தங்கள் 'தென்றலை' ப்-போற்றிய மனம் தூற்றுகிறது. வேடிக்கை தான். தங்கள் பேனாவின் அவசரம் என்ன ? மனம் பதைக்கிறது. வருத்தம் வருகிறது. மனதில் பட்டதை எழுதி விட்டேன் இதனால் தங்கள் பால் உள்ள அன்பும் - மரியாதையும் குறைந்து விட வில்லை. செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டிய அளவிற்கு செய்ய வேண்டும். அளவிற்கு மீறிச் செய்யப்பட்டு விட்டதே !

கே. குமாரசாமி.
எழு கிணறு **சென்னை** - 1

★அன்புள்ள **கண்ணதாசன்** அவர்களுக்கு,

தங்களின் 11—12—54 தேதி தென்றல் இதழைக் கண்டேன். உண்மையிலேயே பூரிப்பும் கொண்டேன் 'கல்கி,யின் மறைவை முன்னிட்டுத் தலையங்கத்தை எழுதாது விட்ட பெருந்தன்மைப் பண்பினையும், எழுத்தாளர்கள் என்ற முறையில் - அவரது நடையை - தனித் தன்மையைப் பாராட்டிக் கட்டுரை வெளியிட்டபெருந்தன்மையினையும் நான் - இளம் எழுத்தாளன் என்கின்ற முறையில் - தங்களைப் பாராட்டாமல் இருக்கமுடியவில்லை. எழுத்தாளர் எந்த வட்டாரத்தைச் சேர்ந்தவராக இருப்பினும் அவரது நிறைவு குறைவுகளைப் பற்றி உள்ளத்தில் பட்டதை எடுத்துரைத்து கௌரவத்தைச் செலுத்த வேண்டியது ஒவ்வொரு எழுத்தாளனுடைய - எழுத்தாள நண்பர்களின் கடமையாகும் அந்த வகையில், என்னுடைய சிறிய பண்பு படைத்த பார்ப்பனத தோழர்களும் உவகை கொள்ளத் தக்கவாறு நடந்து கொண்டிருக்கிறீர்கள். அகம் மட்டிலா மகிழ்ச்சி கொள்கிறது.

அன்பன்
இரா. தமிழ்தாசன்

★ஐயா, வீதியில் போகிற பிணத்தைக் கண்டு, அது எவர் பிணமாயிருந்தாலும், கை கூப்பி வணங்குவது தமிழன் கடமை! அவ்வண்ணமே தாங்களும் "கல்கி" மறைவு குறித்து வருந்தி யிருக்கலாம். அண்ணாவைப் புகழாதார் யார்? அதைக் கொண்டு " சாதிச்சனியன்" களை இமய உச்சிக்குத் தூக்கி புகழ வேண்டிய தில்லையே ! பாரதியாரைத் தூக்கினீர்கள் ! இன்று 'கல்கி' யைத் தூக்குகிறீர்கள்! அது போது தாங்கள் தமிழுக்குப் பொதுக் கவிஞராக இருக்கலாமே! தி.மு. க. விற்குமட்டும்' பிரத்யேகக் கவிஞராக ஏன் விளங்க வேண்டும்? வியாபாரத்திற்காகவா? Hindu' வைப் பாரீர்! தமிழர் உணர்வு கொள்வீர்

ஜி. பட்டு
52, குட்டி நாய்க்கன் தெரு,
சென்னை - 2.

★கவிஞர் **கண்ணதாசன்** அவர்களுக்கு.

வணக்கம் இந்த வார "தென்றல்" எட்டைக் கண்டேன். சிறிதும் எதிர்பாராத செய்தி என்னைத் திக்குமுக்காட வைத்து விட்டது. "பாண்டியா" நீதானடா ஆசிரியன் என்று தங்களைக் கட்டித் தழுவிக் - கொள்ள வேண்டும் என்கிற ஆசை பிறந்தது. அதற்குக் காரணம், தங்கள் எட்டின் முதல் பக்கத்தில் தாங்கள் மாற்றான் தோட்டத்து மணம் தந்த மலருக்கு' அளித்திருக்கும் மதிப்பும், அந்த மலர்வாடி விட்டதின் அனுதாபத்தில் எண்ணம் எழுதாமல் விட்டதும் ஆகும்.

அதே தோட்டத்தில், இருக்கும் மாம், மட்டை, கொடி, மலர், எல்லாம் செய்யத்தவறியதை (ஆனந்த விகடன் தவிர) மாற்றான் தோட்டத்து மலர் செய்து விட்டது. அது தான் "கவிஞன் உள்ளம்" என்று எண்ணுகிறேன்.

நாடு பிடிக்கும் எண்ணத்துடன், இந்தியாவின் மீது போர் தொடுத்தான் அலெக்சாந்தர்; அவனை எதிர்த்த இந்திய மன்னன் புருசோத்தமன். போரில் தோல்வியுற்றான். சிறை பிடிக்கப் பட்டான். அலெக்சாந்தரின் முன் கொண்டு நிறுத்தப் பட்டான்.

'உன்னை நான் எப்படி நடத்த வேண்டுமென்று எதிர் பார்க்கிறாய்' என்று கேட்டான் அலெக்சாந்தர்.

"ஒரு மன்னன்" வேறொரு மன்னனை எப்படி நடத்துவானோ அம் முறையில் எனப் பதலளித்தான் புருசோத்தமன். அவனுக்கு உடனே கிடைத்தது விடுதலை தன்னுடைய பரந்த குணத்தினால், அலெக்சாந்தர் இந்திய சரித்திரத்தில் அழியாப் புகழ் பெற்றான்.

அதேபோல, தங்களுடையபரந்த எண்ணத்தினால், - அழியாப்புகழை நிலை நாட்டி விட்டீர்கள், பத்திரிகையுலகில்.

நீங்கள் நன்றாக, மேன்மையாக வாழ வேண்டும். தென்றல் அடிக்க வேண்டும்; அதன் தேன் மொழியில் நாங்கள் மயங்க வேண்டும். இது தான் என் அவா — ஆர்வம்!

வணக்கம் பல!
"சித்திரை"
மயிலை

திருத்தம்

11-12-54 இதழ் தொடர் கதையின் **5-ம** பகுதியில் இரண்டு இடங்களில் 'மரகதம்' என்று இருப்பதற்கு பதில் 'நந்தினி' என்று விழுந்து விட்டது. திருத்திப்படித்துக் கொள்ள வேண்டுகிறோம்.

தென்றலின் பதினெட்டு வகைத்திட்டம் !

திராவிட இலக்கிய வளர்ச்சிக்குத் தன் பணியைச் செய்ய, 'தென்றல்' முன் வருகிறது.

புதிய இலக்கியங்களை உண்டாக்கக்கோரி, பரிசு வழங்கும் திட்டம் ஒன்றை, 'தென்றல்' இதன் மூலம் பறைசாற்றுகிறது.

அதன்றியும், விரைவில், மேலும் பதினன்கு வகையான எழுத்துக்களைத் தாங்கி வரும் 'தென்றல்'.

அவையாவன :

பரிசுத் திட்டத்தில்...

1. பெருங்கதைப் போட்டி (நாவல்) பரிசு ரூ. 500
2. காவியப்போட்டி ... பரிசு ரூ. 500
3. நாடகப்போட்டி ... பரிசு ரூ. 500
4. இலக்கியச் சுவை நூல் ... பரிசு ரூ. 500

[இவைபற்றிய முழு விபரங்களும், 'தென்றல்' 8-1-55 உ இதழில் வெளிவரும்.]

மேலும் வருவன :

5. வெண்பாப்போட்டி (பரிசு இல்லை)
6. நமது மாவட்டச் செயலாளர்கள்.
7. இவர் ஒரு ரசிகர்!
8. நான் அமைச்சரானால்...
9. இந்நாட்டு மன்னர்...
10. நாங்கள் கேட்கிறோம்; நீங்கள் சொல்லுங்கள்!

மற்றும் எட்டுவகை எழுத்துக்கள்!
விபரங்கட்கு, 8-1-55உ தென்றல் பார்க்கவும்!

தென்றல்
★ புதிய முகவரி ★
1955 ஜனவரி முதல் தேதி முதல்
2-127 மவுண்ட் ரோடு, சென்னை-6.

ச. கோ. கிருட்டினன் கீழ்மதுரை

" புலி புறங்காக்கும் குருளை போல - மெலிவில் செங்கோனீ புறங்காப்ப ... இந்த அடிகள் எந்தப் பாடலில் காணக்கிடக்கிறது : யார் பாடியது ? விளக்கம் தருக !

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை இடைக்காடனர் பாடியதாக புறநானூறு (42) வது பாடலில் காணப்படுகிறது. தாய்ப் புலி தான் உயிரோடு வாழும் வரை தன் குட்டியை பிறர் கொண்டு போகவிடாது. தன் உயிரை இழந்த பின்னரே குட்டியை இழக்கும்; அவ்வாறே அரசரும் தாம் உயிருடன் வாழும் வரை, தம் குடிமக்களை பிறருக்கு அடிமையாக வாழ விடார் என்பது இப்பாடலின் கருத்து.

தமிழ் அன்பன் சென்னை. 28

தென்றலாரே ! பெரும் புலவர்களிடமும் - கவிஞர்களிடமும் சில குறைகள் காணப்படுகிறதே என் செய்வது ?

ரோஜாச் செடியென்றல் முள் இருக்கத்தான் செய்யும் - அதற்காக வருந்தாதே - அதிலிருக்கும் மலரைக் கண்டு மகிழ்வாய் !

ஜெயராமன். மேலூர்.

காவியம் முந்தியதா ? ஓவியம் முந்தியதா ?

பின்னது முந்தியது

சந்திரா. மானாமதுரை

எதற் கெடுத்தாலும் காலம் பதில் கூறும் என்று சிலர் கூறுகிறார்களே ? அதன் பொருள் என்ன ?

காலம் மூடுதிரையைக் கிழிக்கும் கூர்வாள், போலி வேடத்தைக் கலைத்தெறியும் சக்தி வாய்ந்த வழக்கறிஞன் என்பதனால் !

எழுமலை சேலம்.

ஐயா ! இன்றைய சமுதாயத் திற்கு எத்தகைய இலக்கியங்கள் தேவை என்று நீங்கள் கருதுகிறீர்கள் ?

காலங் காட்டும் கண்ணாடியாக - ஞாலத்தின் குறைபாடுகளை எடுத்து விளக்குவதாக அமைக்கப் பட்ட இலக்கியங்களே மிக மிகத்தேவை. அத்தகைய இலக்கியங்கள் தான் சமுதாயத்தை செப்பனிடப் பயன்படும்.

கேசவன் ஆரக்கோணம்.

சோழர் மரபில் கரிகாலன் எனப் பெயர் அடைந்தவர்கள் எத்தனைப் பேர் - தென்றலாரே சற்றே விளக்கவும் ?

பொருநராற்றுப் படை - பட்டினப் பாலை கட்கு தலைவனுகிய கரிகாலன் ஒருவன். இவனுக்கு திருமாவளவன் என்று ஒரு பெயரும் உண்டு. தஞ்சையில் ராசேஸ்வரம் எடுத்த இராசராச சோழனின் தமையன் இரண்டாம் கரிகாலன் அவனுக்கு ஆதித்தன் என்று ஒரு பெயரும் உண்டு. வீரசோழிய மெனும் இலக்கணத்தை செய்தவனுகிய கரிகாலன் மூன்றுமவன். இவனுக்கு வீர இராசேந்திரன் என்று ஒரு பெயர் உண்டு. கலிங்கத்துப் பரணி கொண்டவனும் - பெரிய புராணம் பாடுவித்த வனுமாகிய முதலாம் குலோத்துங்கன் நான்காம் கரிகாலன் என்றும், இலக்கியங்களில் காணப்படுகிறது.

சூடாமணி — குன்றத்தூர்.

அவன் குழந்தை யுள்ளம் படைத்தவன் என்கிறார்களே இதன் உட்பொருள் என்ன ?

இதிலென்ன சூடா மணியே ! உட்பொருள் கிடக்கிறது. உள்ளம் வெள்ளை ! அதாவது களங்கம் இல்லாதது என்பதைத்தவிர.

அனுமந்தையா சேவ்வாய் பேட்டை

கம்ப ராமாயணத்தை வெறுக்கும் நீங்கள் அதைப் போல ஒரு காவியத்தை செய்ய முடியுமா ?

நிச்சயம் முடியாது ! ' சிலை உரு அழிதரச் செறிந்த மார்பில் தன் முலை உருவின என முதுகை நோக்கிடும் ' பத்தினித் திலகங்களை வைத்து வரை காட்சி படலம் தீட்ட எங்களால் நிச்சயம் முடியாது ! அதில் கம்பனுக்கு கம்பனே நிகர் !

மூர்த்தய்யா சென்னை 16.

தென்றலாரே ! ஒரு கேள்வி நீங்கள் மழை காலத்தில் யாரை அதிகமாக வெறுப்பீர்கள் ?

சாலையில் போகிறவர்களை கவனிக்காமல் காரை வேகமாக ஓட்டும் டிரைவர்களை.

நெடுஞ்சோழன். ஆரணி

ஐயா தென்றலாரே ! கௌடல்யர் அல்லது சாணக்கியன் எழுதிய ' அர்தசாத்திரத்தைப் பற்றி ' ஒரு சில ஆரியர்கள் வானளாவ உயர்த்திப் பேசுகிறார்களே - அப்படி அதிலென்ன அரிய கருத்துக்கள் புதைந்து கிடக்கின்றது ?

அந்தக் குப்பையை லேசாகக் கிளறி விடுகிறேன். பாருங்கள் !

பல ஜாதிப்பிரிவுகளும் - நால் வகை வர்ணசிரம தர்மமும் இருக்க வேண்டும்.

உழவுத் தொழில் இழிவானது. வெறுக்கத் தக்கது.

கள்ளைக் குடிக்கலாம். பிறரைக் குடிக்க வைக்கலாம். அதெற்கென ஒரு அரசாங்க அதிகாரி உண்டு. அரசாங்கம் தன் வருவாய்க்கு கொள்ளை யடிக்கலாம். நிரபராதிகள் என்று தெரிந்தும் 'தண்டம்' வசூலிக்கலாம். வஞ்சித்து வரி திரட்டலாம்.

மந்திரத்தால் மக்களை மயக்கி பொருள் சேர்க்கலாம்.

தனி மனிதர்கள் சூதாடியும் - கொள்ளையடித்தும் வாழ்க்கை நடத்த பொருள் திரட்டலாம். தவறில்லை.

விபசார விடுதிகள் நடத்திபொருள் சேர்க்கலாம்'அர்தசாத்திரம்' இதை அனுமதிக்கிறது. விபசார விடுதி மூலம் கிடைக்கும் வருமானத்தில் அரசாங்கத்திற்கு ஒரு பகுதி வரி செலுத்த வேண்டும்,

இப்படி இன்னும் எத்தனையோ அழுகல்கள். அத்தனையும் அர்தசாத்திரந்தில். அது பற்றி ஒரு அழுகல் புராணமே எழுதலாமே !

பொதுவாழ்வில் பணியாற்றி, இலக்கியத்துப்
பொன்வீட்டில் இளைப்பாறப் புகுந்தகாலை
மதுக்கோப்பை கரத்தேந்திக் குடியன்காணும்
மாறாத கனவுலகம் காட்சியாகும் !
சதுராடும் மங்கையரின் பாதத்தோடு
சரியாகச் சேர்ந்தாடும் சிலம்பின் ஓசை
கதகதப்பை வாலிபரின் உளத்தி லேற்றிக்
கலக்குதல்போல் இலக்கியமும் கலக்கும் நெஞ்சை !

— கண்ணதாசன்

கல்லறைக் குயில்

ஆங்கில பெரும் புலவன் பைரன்! அவன் வாழ்க்கை மிக மிக விசித்திரமானது வாழ் நாளின் ஒவ்வொரு வினாடியும் இன்பமாகக் கழிய வேண்டு மென்பது அவன் ஆசை. பெண்கள் ! அவர்கள் தான் அவன் உயிர்நாடிகள். வட்டமிடும் வடிவழகியரின் பொன் மடிகளிலேயே அந்தக் காதல் புலவன் தன் வாழ்நாளின் பெரும் பகுதியைக் கழித்திருக்கிறான். வேளைக் கொருத்தி - வித விதமான அழகிகள் ! கேளுங்கள் அவள் சிரித்தால் வைரங்கள் சிந்தும் ! அழுதால் அகிலின் வாசனை வீசும் ! வீட்டில் இருந்தால் விளக்கு வேண்டாம். அவ்வளவு ஒளி அவள் முகத்தில் ! பார்த்தாள் சொக்கிவிடும் பச்சை வர்ணக் கிளிகள். தந்த நிற சிற்பங்கள். அத்தனையும் பெண் புறுக்கள் அந்தக் கவிஞனைச் சுற்றிலும் ; இப்படி ஓடுகிறது. தித்திக்கும் தமிழில் — ' சல சல ' வென்று ஓடுகின்ற சிற்றருவியைப் போல் ஓடுகிறது நண்பர் இராதாமணாளனின் தமிழ் ; கண்கவர் முகப்புடன் இதை வெளியிட்ட 'மலர் நிலையத்தார்' நம் பாராட்டு தலுக்குரியவர்கள்.

கிடைக்குமிடம் : மலர் நிலையம்
விலை ரூபாய் இரண்டு பிராட்வே சென்னை.

காதல் நிலைக்கவிதைகள்

காலம் வரின் பூ மலரும். பருவம் வந்திடில் காதல் மலரும் ; மலர் மணம் வீசுதல் போல் — பருவமும் காதல் மணம் வீசும். இயற்கை இது. பொதுவாக "காதல்! காதல்!" என்று எல்லோரும்கூறிக்கொள்ளுகிறார்களே தவிர - அதன் முழுப் பொருளைபலர் இன்றளவும் உணர்ந்தாரில்லை. புரிந்தோ புரியாமலோ- தெரிந்தோ - தெரிந்தவர்களைப் போல நடித்தோ - தப்பித்துக் கொள்கின்றனர் இளைஞர் பலர். அழகால் முளைக்கும் சில பேருக்குக் காதல். பணத்தால் அரும்பும் சிலருக்கு - பழக்கத்தால் ஏற்படும் சிலருக்கு - இப்படி காதல் பல வழிகளில் தோன்றுகிறது. ஆனல் ஒருவன் ஒருத்தி அன்பால் இணைவதுவே உண்மைக் காதல் என்கிறார் அ. கி. பரந்தாமன் M. A. அவர்கள். ஆங்கிலக் கவிஞர் பிரௌனிங் என்பாரைப் பின் பற்றி எழுதப் பட்ட கவிதை நூல். அளவில் சிறியதாயினும் ; கருத்துக்கள் - அதுவும் இளைஞருலகிற்கு பயன் படுகின்ற புதிய கருத்துக்கள் அடங்கியது. விலை கூடக் குறைவு தான்

0-10-0 அணா

கிடைக்குமிடம்
தமிழ் இந்தியா பதிப்பகம்
கீழ் மதுரை. மதுரை

தமிழ்

உலகில் இன்று கிட்டத் தட்ட சுமார் 3, 300, மொழிகள் உள்ளன அவைகளில் பெரும் பாலானவை செப்பனடைய வில்லை; மற்றும் பல பேச்சோடு சரி, எழுத்துருவம் பெற வில்லை; வடமொழி எனிலோ இலக்கியங்களும் - நயமும் அற்று இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு மொழி - ஆனல் நம் தமிழ் மொழியோ ; இப்போழுது தான் தோன்றிற்று என்று அறிதி இட்டுக் கூற முடியாத அளவு தொன்மை வாய்ந்தது. அதோடு மட்டுமல்ல - எழிலும் - இலக்கிய வளங்களும் மண்டிக் கிடக்கும் மொழி தமிழ். இத்தகைய தமிழ் மொழியின் தனிச் சிறப்பு குறித்து தெளிவுபட விளக்கியுள்ளார் தோழர். எஸ், சதாசிவம் அவர்கள். தமிழ், தமிழகம் - தமிழர், தமிழ் இலக்கியம்' வேற்று மொழிக்கலப்பு - தமிழின் தனிப் பண்பாடு இவைகள் பற்றி ஆராயப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு இளைஞர்களின் கரங்களிலும் தவழ வேண்டிய நூல் சதாசிவம் அவர்களின் தமிழ்

வெளியிட்டோர் : இன்ப வாழ்வுப் பதிப்பகம்
விலை ரூ. 2—0—0 கோவை

புது வாழ்வு

புது வாழ்வு. புத்தகத்தைப் புரட்டினேன். உண்மையிலேயே புதுமைக் கருத்துக்கள் பூத்துக்குலுங்குகின்றன. ஆங்காங்கே அரிய கருத்துக்கள் சிவைபட !கையாளப் பட்டிருக்கிறது. இப்படி டாக்டர் வரத ராசனரின் முன்னுரையுடன் ஆரம்பிக்கப்படும் ' புது வாழ்வு ' நாட்டின் படபிடிப்பு. சமுதாயத்தின் கோணல்கள் குத்திக் காட்டப் பட்டுள்ளது. இக் கதையில் வரும் சுந்தரம் -பாலு -கமலா -வாசந்தி நம்மைச் சுற்றிலும் நாலா புறங்களிலும் இருப்பவர்கள். சீரழிந்த குடும்பத்தின் சிதறிய மணிகள். விமலாவிற்காக தன் உயிரை தியாகம் செய்யும் வாசந்தி நம்நினைவை விட்டு என்றும் நீங்க முடியாத பெண் அரசி. இந்த அரிய நாவலை சொல்லோவியமாக்கி நாட்டிற்கு தந்த இதன் ஆசிரியர் நம் நண்பர் அருணன் பாராட்டுதலுக் குரியவர்

கிடைக்குமிடம்
தமிழ் முழக்கம் பதிப்பகம்
சென்னை - 14
விலை- ரூ. 1—8—0

காதற் பலி

சிறுகதைத் தொகுப்பு ; ' சண்ட மாருதம் ' ஏட்டில் வெளிவந்தவை படிக்க சுவையாக இருக்கிறது.

ஆசிரியர். சி. சுந்திரேசன்.
விலை 0-4-0 அணா
ரதி பதிப்பகம்
மதுரை —வளவன்

Edited and Published by Kannadasan, 13, Nallanna Mudali Lane, Madras-14. Printed by R. M. Kanagasabapathy at Elangovan Printers, 23, Muthu Mudali St., Madras-14.